பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 09 திங்கட்கிழமை (23.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 208

## ஐ.தே.க. தலைமைப் பொறுப்பிலிருந்து ரணிலை வெளியேற்ற மும்முர முயற்சி!

### செயற்குழுவுக்கு யோசனை வருகிறது

கொழும்பு, ஜூன் 23

**ரணில் விக்கிரமசிங்கவை ஐ.தே.கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்குவது உட்படப் பல்வேறு விடயங்கள் அடங்கிய யோசனைத் திட்டம் ஒன்று அக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

கட்சியின் அடுத்த செயற்குழுக் கூட்டம் கூடுகின்றபோது இந்த யோசனைத் திட்டத்தைச் சமர்ப்பித்து, செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை மூலம் இந்த யோசனையை நிறைவேற்றி, ரணிலைக் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்று அறியமுடிகின்றது.

ரணிலைக் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து விலகக் கோரும் ஐ.தே. கட்சி எம்.பிக்கள் பலர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

உள்வீட்டில் ஓரிருவரால் மேற்கொள்ளப்படும் திட்டமே ஐ.தே.கட்சியால் இன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது. இது ஓர் ஏகாதிபத்திய செயற்பாடு போன்றுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கிளைமோர் சிவிலியன் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 23

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முல்லைத்தீவு மாவட்டம் மேற்குப் பகுதியில் உள்ள பாலைப்பாணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவு மூவர் சுட்டுக்கொலை

திருகோணமலையில் நேற்றிரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று இணையத் தளத் தகவல்கள் தெரிவித்தன.

வீடொன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள் தந்தை, அவர் இரு பிள்ளைகளென மூவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இச்சம்பவம் குறித்து மேலதிக விபரம் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியாகவில்லை.

## மாகாணசபைத் தேர்தலில் இ.தொ.கா. இம்முறை தனித்துக் களமிறங்குமாம்!

கொழும்பு, ஜூன் 23

நடைபெறவிருக்கும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தனது சேவல் சின்னத்தில் தனித்துக் களமிறங்கும்.

கட்சியின் தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் இத்தகவலை கொட்டகலையில் அண்மையில்இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசில் அங்கம் வகித்தாலும் -

இத் தேர்தலில் ஆளும் கட்சிக் கூட்டுக்குச் சவாலாகத் தனது வேட்பாளர்களைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசுக்கு இந்தியா உதவி; அதற்கு எதிராக அணி திரள்வோம்!

### தமிழகக் கட்சிகளுக்கு நெடுமாறன் அழைப்பு

சென்னை, ஜூன் 23

தமிழர்களைக் கொன்று குவிக்க இலங்கை அரசுக்கு ஆயுத உதவி செய்யும் இந்திய அரசுக்கு எதிராகத் தமிழகக் கட்சிகள் ஒன்று திரள வேண்டும் என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன், வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவசங்கர் மேனன், பாதுகாப்புத்துறைச் செயலாளர் விஜயசிங் ஆகியோர் திடீரென கொழும்புக்குச் சென்றுள்ளனர்.

என்ன நோக்கத்துடன் இவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பது வெளியிடப்படாமல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை: சங்கப் பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்திப்பார்

கொழும்பு, ஜூன் 23

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பது தொடர்பாக ஆசிரியர் சங்கங்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையில் இந்த வாரம் முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவே இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கிறார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆசிரியர் சங்கங்கள் விதித்திருந்த காலக்கெடு முடியும் முன்பே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் அவர்களது சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக்கோரி இரு நாள்கள் சுகயீன

(12ஆம் பக்கம் பார்க்க)

## களுதாவளையில் கிளைமோரையடுத்து படையினரின் தாக்குதலில் இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 23

மட்டக்களப்பு, களுதாவளை, தேவாலய வீதியில் நேற்றுக்காலை விசேட அதிரடிப்படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலையடுத்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் சிலர் காயமடைந்தனர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்தில் மேற்கொண்ட தேடுதலின்போது புலிகள் இயக்க உறுப்பினர்களின் இரு சடலங்களை தாம் மீட்டிருக்கின்

(12ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே 5ஆம் பக்கத்தில்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு வழமை போல், உதயனின் கல்விச் சுடரில் மாணவர்களுக்கு உதவும் விதத்தில் இன்று தொடக்கம் மாதிரி வினாத்தாள்களை வெளியிட முடிவுசெய்துள்ளோம்.

மாணவர்களே!

பல மாவட்டங்களையும் சேர்ந்த பிரபல ஆசியரியர்கள் தயாரித்து வழங்கும் வினாத்தாள்களுக்கு விடை எழுதிப் பரீட்சையில் அதிக புள்ளி பெறுங்கள் - சித்திபெறுங்கள்.

உள்ளே

இந்து நாகரிகம் மற்றும் புவியியல் பாடங்களுக்கான வினாப் பத்திரங்களுக்கு ஐந்தாம் பக்கத்தைப் புரட்டுங்கள்.

## வவுனியாவில் மும்முனை நகர்வு முறியடிப்பு 18 இராணுவத்தினர் பலி; 31 பேர் படுகாயம்

### புலிகள் தரப்பு அறிவிப்பு

வவுனியா, ஜூன் 23

வவுனியா மாவட்டம் பாலமோட்டையில் இராணுவத்தினரின் மும்முனை முன்நகர்வை தாங்கள் முறியடித்துள்ளனர் என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இம் முறியடிப்புச் சமரில் 18 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 31 படையினர் காயமடைந்துள்ளனர் எனவும் புலிகள் தெரிவித்துள்ளனர். படையினரின் 3 சடலங்களும் மற்றும் ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் நேற்றிரவு தெரிவித்தமை வருமாறு:-

பாலமோட்டையில் இருந்து மும்முனைகளில் இன்று (நேற்று) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் செறிவான எறிகணை வீச்சுக்களுடன் படையினர் பாரிய எடுப்பிலான முன்நகர்வுகளைத் தொடங்கினர். இதில் படையினர் இரு முனைகளில் மேற்கொண்ட முன்நகர்வுகள் விடுதலைப் புலிகளால் காலை 7.00 மணியளவில் முறியடிக்கப்பட்டன. ஒரு முனையில் படையினர் முன்நகர்வு முறியடிப்புத் தாக்குதல் பிற்பகல் 3.45 மணிவரை நீடித்தது. இம்முனையும் பின்னர் முறியடிக்கப்பட்டு படையினர் பழைய நிலைகளுக்கு துரத்தப்பட்டனர்.

இம்முறியடிப்புத் தாக்குதலில் 18 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 31 படையினர்

(12ஆம் பக்கம் பார்க்க)

புதுக்கடைத் திறப்புவிழா

அன்னை புத்தகசாலை

இல.07, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள புதிய சந்தைக் கட்டடத்தில் இன்று காலை 10 மணியளவில் மிகவும் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும்
வந்து இந்நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

இல.07, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை பஞ்சாட்சரம்



பழைய பாற்சங்க வீதி, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை பஞ்சாட்சரம் நேற்று (22.06.2008) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - மீனாட்சி தம்பதியினரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - சீனிக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி, ரோகணேஸ்வரி (மீனா, ஆசிரியை, யா/சுன்னாகம் அ.மி.த.க. பாடசாலை), காசிநாதன் (கனடா), கதிர்காமநாதன் (மகராசன்) - (கனடா, இணுவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகநாதன் (அத்தான் - வட்டுக்கோட்டை), சுமதி (கனடா) ஆகியோரின் மாமனாரும், மதூசனன், தருண்யா, ஆரூரன் (கனடா) ஆகியோரின் பேரனும், அமரர்களான கா.செ.நடராசா (பண்டிதர்), சண்முகநாதன் (ஆசிரியர்) மற்றும் மனோன்மணி, இராசேஸ்வரி, லோகநாதன் (வர்த்தகர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2008) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செல்வபதி*
*பழைய பாற்சங்க ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
குடும்பத்தினர், காசிநாதன்,
கதிர்காமநாதன் (மகன்மார்).

## தர்மலிங்கம் சண்முகலிங்கம்

(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி)



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சண்முகலிங்கம் 21.06.2008 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், கலைமகளின் அன்புக் கணவரும், தயாளன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கணக்காய்வு திணைக்களம், வடமாகாணம், திருகோணமலை) அவர்களின் பாசமிகு தந்தையும், நாகலக்சுமி, சிவஞானசுந்தரி, தேவசேனா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நல்லநாயகம் மற்றும் ஸ்ரீதரன், இராஜரட்ணம், சாராதாமணி, காலஞ்சென்ற இராஜயோகன் மற்றும் சுசீலாதேவி, சரோஜா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் சபாநடேசன், விஜேந்திரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2008) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26/2, இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி.*
*077 5935758*

தகவல்:
மனைவி, மகன்.

## நடராசா சந்திரமோகன்

(இளைப்பாறிய தொழில்நுட்ப உதவியாளர்)



யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நடராசா சந்திரமோகன் 20.06.2008 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா- யோகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் கந்தசாமி (புதுமைலோலன், இளைப்பாறிய அதிபர்) - கனகமணி (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மருமகனும் குணராஜா (செங்கையாழியன்), சிவஞானம், சிவானந்தம் ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்பரசியின் அன்புக் கணவரும் சுகந்த், பிரசாந்த், லாவண்யா ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் சிறீதரன், லலிதாதேவி, லீலாதேவி, சுகந்தாதேவி, யசோதாதேவி, சிறீரஞ்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அன்பழகன், கலையரசி, எழிலரசி, காலஞ்சென்ற மதியழகன் மற்றும் இளங்கோ ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.06.2008 புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கந்தசாமி-கனகமணி
(மாமா, மாமி)
வி.ந. சிறீதரன்
(சகோதரன்)

*215/1, கச்சேரி - நல்லூர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (75439)

## தென்மராட்சியில் நாளை தரம்-5 மதிப்பீட்டு பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 23

இயேசு அகதிகள் பணியின் ஊடாக தென்மராட்சி கல்வி வலயத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் செயற்திட்ட மதிப்பீடு 8க்கான பரீட்சை நாளை செவ்வாய்கிழமை இடம்பெறும்.

இந்த பரீட்சைக்கான வினாத்தாள்களை இன்று திங்கட்கிழமை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு ஆரம்பகல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா கேட்டுள்ளார். (1)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, ஜூன் 23

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரனையுடன் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அராலி திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* தாவடி காளியம்பாள் வி.க. 'பி' அணி எதிர் அராலி அண்ணா வி.க 'எ' அணி.
* அளவெட்டி கலைவாணி வி.க. 'பி' அணி எதிர் இளவாலை யங்கென்றீஸ் வி.க 'எ' அணி. (1-86)

* * *

வலி.வடக்கு, ஜூன் 23

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரனையுடன் நடத்தும் லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மறுமலர்ச்சி வினையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகமும் உடுவில் டொன்பொஸ்கோ விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

## மீசாலையில் கணபதி ஹோமம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலயத்தில் 19ஆவது வருட 'கணபதி ஹோமம்' எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இந்தக் கணபதி ஹோமம் நாட்டில் அமைதி சாந்தி, சமாதானம் நிலவவேண்டும் என வேண்டி - பொதுமக்களால் வந்து சேர்ந்து நடத்தப்படவுள்ளதாக ஆலய முகாமையாளர் எஸ்.இராமலிங்கம் தெரிவித்தார்.

கணபதி ஹோமம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ்.சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்னதானமும் இடம்பெறும். (1-131)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில மற்றும் ஆங்கில இலக்கணம், O/L, A/L, B.A. வினாவிடை வகுப்புக்கள் By ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம் (சனி, ஞாயிறு பிளாக் வீதி, சங்கானை (ஏனைய நாள்கள்)
"THE ROYAL IS THE BEST"

## தவறிவிட்டது

குருசுமதவடி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த மார்க்கண்டு ரதீஸ்குமார் என்பவருடைய 720903148V இலக்கத்தை உடைய தேசிய அடையாள அட்டையும், வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் கொக்குவிலுக்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் 21.06.2008 சனிக்கிழமை தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் தந்துதவவும். தொ.பே: 0775925377 (75659)

## கண்ணீர் அஞ்சலி

எமது 'பொற்பதம்' அமைப்போடு மிக நீண்ட காலமாக நல்லுறவு பூண்டிருந்தவரும் பிரபல கட்டட ஒப்பந்தக்காரரும் ஸ்ரீமுருகன் மரக்காலை உரிமையாளருமான

**பூதர் ஐயாத்துரை**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரோடு இணைந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] பிள்ளை வீதி,
[illegible]

## கண்ணீர் அஞ்சலி



கலாநிதி
**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

சமூகத்தின் தேவையை உணர்ந்து
அறப்பணி செய்த தங்களின்
திருக்கரங்களை என்றும்
நினைவு கொள்வோம்.
என் கடன் பணி செய்து கிடப்பதே.

*உரிமையாளர் அ.தங்கவேல் சக ஊழியர்கள்*
*"சந்திரா ஐஸ்கிறீம் ஹவுஸ்"*

சிவன் கோவில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
28.11.1946

மறைவு
23.05.2008

**அமரர் பொன்னையா பத்மநாதன்**

எமது குடும்பத்தலைவரின் பிரிவுத்துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் தொலைபேசி, தொலைநகல், கடிதம் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வழங்கியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*"தாயகம்"*
*இளந்தாரி கோவிலடி,*
*இணுவில் கிழக்கு*
*தொ.பே: 0776569613 ,00919443831077*

குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 26 |
| * | * |
| 07 | 06 |
| * | * |
| 1959 | 2005 |

திருமதி
**ஜெயந்திமாலா சிவரத்தினராசா**

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உன்னைப் போல வருமா?
வேதனையில் தவிக்கின்றோம்
விரைந்து வந்து ஆறுதல் தாராயா?

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

கணவர்,
பிள்ளைகள்.

## 33ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**ஆறுமுகம் சிவகுமார்**
(F.M.S, CLERK OF WORKS)

கடந்த 22.05.2008 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் ஆறுமுகம் சிவகுமார் அவர்களின் ஆத்மசாந்திப் பிரர்த்தனை இன்று (23.06.2008) மு.ப 10.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தங்களை வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

எமது அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

*துவாரகா*
*மூளாய், சுழிபுரம்*

தகவல்:
திருமதி சி.சிவகுமார்,
(சி/553468) சி.ராகவன், சி.தினேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் செயற்படும் அபிவிருத்திச்சங்கம் வித்தியாலயத்தின் மேம்பாட்டுக்கு உதவுகிறது



ஏழாலை அபிவிருத்திச் சங்கம் என்ற பெயரில் வெளிநாட்டில் செயற்படும் அமைப்பைச் சேர்ந்த பழைய மாணவர்களும் மற்றவர்களும் இணைந்து ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்துக்கு உதவிகள் வழங்கி வருகிறார்கள். ஆனால் வித்தியாலய மாணவர்களின் பெற்றோர் தம்பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியிலோ வித்தியாலய அபிவிருத்தியிலோ காட்டும் அக்கறை திருப்திகரமாக இல்லை.

ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்தின் அதிபர் நல்லையா சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதிபருடன் உரையாடியதிலும் நேரடியாகப் பார்வையிட்டதிலும் கிடைத்த விவரங்களை இங்கு தருகின்றோம்:

1960 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் 1961 ஆம் ஆண்டு அரசின் கல்விக்கொள்கைக்கு ஏற்ப கையேற்கப்பட்டு அரச பாடசாலையாக இயங்கி வருகின்றது. இன்று 196 பிள்ளைகள் கற்று வருகின்றார்கள். 9 மாணவர்கள் கிறிஸ்தவப்பிள்ளைகள்.




வெள்ளிக்கிழமைகளில்இரண்டு மதங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் தமது பிரார்த்தனைகளை முடித்த பின்னர் ஒன்றாக நற்சிந்தனை கூறும் நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். இடைநிலை வகுப்புகளின் மாணவர்கள் ஒவ்வொருதர் நற்சிந்தனை கூறுவது என்ற அடிப்படையில் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்களுக்கு மேடைகளில் பேசும் சந்தர்ப்பம் சுழற்சி முறையில் அனைவருக்கும் கிடைக்கின்றது.

13 நிரந்தர ஆசிரியர்களும் 04 பகுதி நேர ஆசிரியர்களுமாக 17 ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். பகுதி நேர ஆசிரியர்கள் செவ்

## ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயத்தின் நிலைமை

வாய், வியாழன் ஆகிய நாள்களில் சங்கீதம், விவசாயம், சித்தரம், மனைப்பொருளியல் போன்ற பாடங்களுக்கு வருகை தருகின்றார்கள். ஆங்கில ஆசிரியர் இல்லாத போதிலும் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர் ஒருவர் ஆங்கிலம் கற்பிக்கின்றார்.

தற்போது கல்வி கற்கும் பிள்ளைகள் அனைவரும் சுற்றாடலில் இருந்து வரும் பிள்ளைகளாவர்.உயர்பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக இப்பாடசாலை காணப்படுவதுடன் வடக்குப் பக்கமாக கட்டுவன் பகுதியில் மீள்குடியேற்றம் இடம்பெறாமையும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவுக்கு காரணமாக இருக்கின்றது.

**புலமைப்பரிசில் பெறுபேறுகள்**

கடந்தாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 17 மாணவர்கள் தோற்றி 02 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள். மற்றும் 6 பிள்ளைகள் 100 புள்ளிகளுக்கு மேல் பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள். குறைந்த புள்ளியாக 46 காணப்படுகின்றது.

இந்தாண்டும் கூட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் நிகழ்வில் ஐந்து ஆசிரியர்களும் அதிபரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றார்கள். 14 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார்கள். பாடசாலை வகுப்புகளுடன் விசேட வகுப்புகள் மற்றும் அதிவிஷேஷமாக கருத்தில் கொள்ள வேண்டிய மாணவர்கள் ஆசிரியர்களின் வீடுகளுக்கு அழைத்து கற்பிக்கும் நிலைமையும் காணப்படுவதுடன் ஆங்கிலம், சிங்களம் கூட பரீட்சைக்காக விசேடமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது.

தரம் 1 முதல் 11 ஆம் தரம் வரை வகுப்புகள் காணப்படுகின்ற போதிலும் அயலில் உள்ள வசதியானவர்கள், செல்வாக்குமிக்கவர்களின் பிள்ளளைகள் பஸ் ஏறி நகரப்பாடசாலைகளுக்கு செல்லும் நிலைமையும் காணப்படுகின்றது.

**க.பொ.த. சாதாரண பெறுபேறுகள்**

க.பொ.த. சாதாரணதரப் பெறுபேற்றைப் பொறுத்த வரையில் கடந்தாண்டு 15 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 9 மாணவர்கள் சித்தி அடைந்து உயர்தர வகுப்பிற்கு கல்வி கற்கச் சென்றுள்ளார்கள். 3 பேர் கணித பாடம் எடுத்துக் கொடுத்துப் படிக்கும் நிலையில் உள்ள போதிலும் 6 பேர் முழுமையாக சித்தி அடைந்துள்ளார்கள்.

அவர்களில் பெரும்பான்மையினர் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கின்றார்கள். மாணவர்களின் கல்வியில் முழுமையாக பெற்றோர்களின் ஒத்துழைப்பு கிடைக்காத நிலைமையும் காணப்படுகின்றது.

**பெற்றோர் காட்டும் அக்கறை போதாது**

பெற்றோர்களும் பிள்ளைகள் விடயத்தில் சற்று அக்கறை காட்டுவார்களாக இருந்தால் பெறுபேற்றின் மட்டத்தை அதிகரிக்க முடியும் எனவும் அதிபர் கூறுகின்றார். பெற்றோர்களை வரச்சொல்லி விட்டால் அம்மாமார் வருவார்கள். அப்பாமார்களின் வருகை குறைவாகவே காணப்படுகின்றது.

பொருளாதாரரீதியாக பிள்ளைகளின் பெற்றோர்கள் பின்னடைந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்குகின்றது. பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் இயங்கவில்லை. இயங்க முயற்சிகள் மேற்கொண்டும் வெற்றி கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டில் உள்ள இப்பகுதியைச் சேர்ந்தவர்களும் பழைய மாணவர்களும் பாடசாலையின் தேவை உணர்ந்து உதவிகளை வழங்குகின்றார்கள். இந்த வகையில் 8 லட்சம் ரூபா செலவில் நூலகக் கட்டடம் மற்றும் மின்சார வசதிகள் போன்றவற்றை செய்துள்ளார்கள்.

கல்வித்திணைக்களம் கூட பாடசாலையின் நெருக்கடியை கருத்தில் கொண்டு 15 இலட்சம் ரூபா செலவில் கட்டடத் தொகுதி ஒன்றை அமைத்துக் கொடுக்க முயற்சி எடுத்துள்ளது. கட்டடப்பணி முழுமையடையாத நிலைமையிலேயே வகுப்புகள் நடைபெறும் நிலை காணப்படுகின்றது.

விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை. ஆகக் குறைந்தது ஒரு விஞ்ஞான அறையென்றும் கூற முடியாத நிலைமையில் இடநெருக்கடி காணப்படுகின்றது. தற்போதைய கற்றல் முறைக்கு ஏற்ப வகுப்பறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தனித்தனி வகுப்பறைகளாக பிரித்துக் கட்டப்பட்ட கட்டடத்தொகுதி மட்டுப்படுத்தியளவில் காணப்பட்டாலும் உள்ள வளத்தை முழுமையாக பயன்படுத்தி நிற்கின்றமை பாராட்டப்பட வேண்டியதாகும்.




திறந்த மண்டபத்தில் வகுப்பறைகள் சில தற்காலிக தடுப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றன.

**மாணவர் திறமையும் பெற்ற பரிசில்களும்**

தமிழ்தினப் போட்டிகளில் கோட்டமட்டம் பரிசுகளைப் பெறுவதுடன் வலய மட்டத்தில் ஒரு சில 3 ஆம் இடங்களையும் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆங்கிலதினப் போட்டிகளிலும் தமதுதிறமையை காட்டி வருகின்

## பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியில் பெற்றோரின் அக்கறை போதாது

றார்கள்.

சமயப் போட்டிகள் உட்பட ஏனைய போட்டிகளிலும் கலந்து கொள்கின்றார்கள். இந்த வகையில் கடந்த வாரம் இரட்சணிய சேனை நடத்திய எயிட்ஸ் விளிப்புணர்வுக் கருத்தரங்கை தொடர்ந்து வைத்த பரீட்சையில் 11 மாணவ, மாணவிகள் 100 புள்ளிகளைப் பெற்று பரிசுகளைப் பெற்றுள்ளார்கள். மட்டுப்படுத்தியவளம், மாணவர்கள் என்ற நிலையிலும் பாடசாலை கல்விக்குப் புறம்பாக கவனிப்பு போன்ற செயற்பாடுகளும் காணப்படுகின்றன.

சொந்தமான விளையாட்டு மைதானம் இல்லை. தனியார் காணியொன்றை அதுவும் கூட மட்டுப்படுத்தியளவிலேயே காணப்படுகின்ற நிலையில் மைதானமாகவும் பிரார்த்தனைக்கான இடமாகவும் பயன்படுத்துகின்றார்கள்.

சுற்றாடலில் பல வெற்றுக் காணிகள் காணப்படுகின்றன. இதனைக் கொள்வனவு செய்து வழங்கினால் பாடசாலைக்கு கூடிய பயன்பாடு உடையதாக காணப்பட முடியும் எனவும் கூறும்அதிபர் கடந்த மாதம் கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற 13 வயதுப் பெண்களுக்கான ஓட்டப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றரில் முதலாம் இடத்தை சி.கார்த்திகா என்ற மாணவி பெற்றுள்ளார். வலய மட்டத்திலும் கூட 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக்கான தொடர் பயிற்சிக்கு பாடசாலையில் வளம் இல்லையென்பதே உண்மை நிலைமையாகும்.



உலக உணவுத் திட்டத்திற்கு பெற்றோர்களுடைய ஒத்துழைப்பு முழுமையாகக் கிடைக்கின்றது. சமைப்பதற்கு வேண்டிய சமையல் கூடத்தைக் கூட பெற்றோர்கள் அமைத்துக்கொடுத்துள்ளார்கள்.

விவசாயப் பாடத்திற்கான செயல்முறைப் பயிற்சி முழுமையாகக் காணப்படுகின்றது என்பதற்கு அத்தாட்சியாக பாடசாலையின் முற்றம் தொடக்கம் பாடசாலையின் நாற்புறமும் காணப்படும் சிறிய சிறிய இடங்கள் கூட விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு பயிர்கள் காணப்படுகின்றன.

பயிர்களின் விளைவுகள் கூட மாணவர்களின் உலக உணவுத் திட்டத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் உலக உணவுத் திட்டமும் கூட சிறப்பானதாகக் காணப் படுகின்றன. மாற்று ஆற்றல் உள்ள பிள்ளை களும் இப் பாடசாலையில் காணப்படுகின்றார்கள். இவர்களும் ஏனைய மாணவர்களுடன் இணைந்து கற்று வருகின்றார்கள்.

ஒரு கணனியை அன்பளிப்பாக பெற்று பயன்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக பாடல்களுடன் தொடர்புடைய (CDக்கள்) இறுவட்டுகளைப் பார்ப்பதற்கும் கற்பதற்கும் இதனுடைய பயன்பாடு முழுமையாக உதவுகிறது.

பாடசாலையின் பாதுகாப்பு விடயம் ஒரு கேள்விக்குரியதாக இருப்பதாக பெற்றோர் ஒருவர்குறிப்பிட்டார். போதிய பாதுகாப்பு பாடசலைக்கு இல்லாமையால் பொருள்கள் எதனையும் வெளியால் விட்டுச் செல்லக் கூடிய நிலைமை இல்லை எனவும் குறிப்பிட்டார்.

— பவித்திரன் —



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் 'கட்டிளம் பருவத்தை ஆரோக்கியமாக எதிர்கொள்ளல்' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் மல்லாகம் மகாவித்தியாலய உளவளத்துறை ஆசிரியை திருமதி கலாராணி கிருபானந்தன் கருத்துரை நிகழ்த்துவதையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: சுந்தா)*



குடும்ப புனர்வாழ்வு நிறுவனமும் அகவொளி நிறுவனமும் இணைந்து நடந்த 12 ஆம் திகதி சங்கானைப் பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் உழைப்புக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்வை நடத்தின. சிறுவர்களின் ஊர்திப் பவனியைப் படத்தில் காணலாம்.




சர்வதேச புத்தக தினத்தை முன்னிட்டு உடுப்பிட்டி- கெருடாவில் இ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி பிரிவினால் 'உதயம்' சஞ்சிகை வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கி.தில்லைநாதன் சஞ்சிகையை வெளியிட்டு வைக்க தொழில்நுட்ப ஆலோசகர் அ.சி.மனுகீர்த்தி பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)
## வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடம்

நீகோட் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வேலைத்தள பொறியியலாளருக்கான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் கல்வித்தகமைகள், தொழில்சார் தகமைகள், பிறந்த திகதி மற்றும் வேண்டிய தகவல்கள் அடங்கியதாக சுயவிவரப் பட்டியலைத் தயாரித்து 07.07.2008 ஆம் திகதிக்கு முன்பதாக ***பிரதித் திட்டப் பணிப்பாளர், நீகோட், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்*** எனும் விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வேலைத்தளப் பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின்

**B.Sc Civil Engineering பட்டம்**

தெரிவு முறை - தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரிகள் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம். (ச/553457)

## இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை



சைவமும் தமிழும் தழைந்தோங்க
தன்னையே அர்ப்பணித்த
தூய அன்னை
சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
பெருமாட்டிக்கு நெஞ்சம் நெகிழ்ந்த
கண்ணீர்க் காணிக்கைகள்

**கோபுரம் சவுண்ட்ஸ்**
*38, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு.* (75622)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**சங்கரப்பிள்ளை**
**தில்லையம்மா**

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
ஆறாதம்மா உங்கள் நினைவு.

நீர்வேலி தெற்கு,
முருகையன் கோயிலடி,
நீர்வேலி. (75640) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### *சீனிவாசகம் தேவராசா*



கலட்டி ஒழுங்கை, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் தேவராசா நேற்று (22.06.2008) ஞாயிற்றுக் கிழமை காலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம்- முத்துப்பிள்ளை தம்பதியினரின் மகனும், பூமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை- தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, நடராசா, பாலசிங்கம், அன்னம்மா, இரத்தினம், பவளம் மற்றும் கண்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கவேலாயுதம் (ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான கௌரி, மஞ்சு (மலா) மற்றும் சிவகுமார் (பிரான்ஸ்),றொசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் வஜிதா, சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மானுஷா, தவஷன், பிரபாங்கன், பிரியங்கா, பவித்திரா, பிருந்தா ஆகியோரின் அன்புப் பட்டானருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.06.2008) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வீதி,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே.இல:- 0779582509*

தகவல்:
**குடும்பத்தினர்.** (75655)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம் ஞான செல்வ விநாயகர் ஆலய பரிபாலன சபைக்கு புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சபையின் போசகர்களாக நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பராமாச்சார்ய சுவாமிகளும் லயன் ஆ. சுந்தரலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக கோ. தியாகராஜாவும் செயலாளராக கு. இராஜசிங்கமும் பொருளாளராக த. லோகநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

* * *

வடமாகாண கரப்பந்து மத்தியஸ்தர் சங்கத்தின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக எஸ். அப்புத்துரையும் செயலாளராக ந. சுதேஸ்குமாரும் பொருளாளராக செ. மகிந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

* * *

கோண்டாவில் மத்திய மருந்தகத்திற்கு புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

போசகராக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரனும், தலைவராக டாக்டர் வி. கனகரட்ணமும் செயலாளராக ச. தெட்சனாமூர்த்தியும் பொருளாளராக மு. அமிர்தலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

* * *

வண்ணை கோம்பயன் மணல் இந்து மயான பரிபாலனசபை உறுப்பினர்கள் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக கலாநிதி க. குணராசாவும் செயலாளராக இரா. செல்வவடிவேலும் பொருளாளராக க. சிறிபாலகிருஷ்ணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## திருத்தி வாசிக்கவும்

இம்மாதம் 21 ஆம் திகதிய உதயன் 4 ஆம் பக்கத்தில் வெளியான கே.ரி. பாலகிருஷ்ணனின் கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில்- இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் என்ற வாசகத்தை இதயம் நெகிழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் என்று திருத்தி வாசிக்கவும்

## இதய அஞ்சலி



சமயப்
பணியுடன்
தமிழ்ப்
பணியும்
அறப்பணியும்
ஆற்றி
அமரத்துவம்
அடைந்த

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
**கலப்பராகிரி முருகன் ஆலய சமூகம்,**
**மாரீசன்கூடல், இளவாலை.**

## மரண அறிவித்தல்கள்

### *தவராசா திபாகர்*

மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா திபாகர் 14.06.2008 சனிக்கிழமை சுவிஸில் அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் தவராசா- விஜயகுமாரி தம்பதியினரின்(சுவிஸ்) அன்பு மகனும், தருமரெத்தினம்-தில்லைநாயகி(ஜேர்மன்), அன்னலிங்கம்-சிவக்கொழுந்து(சுவிஸ்) தம்பதியினரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் துக்க நிகழ்வு சிறியதந்தை சிவானந்தராசா (சிவம்) இல்லத்தில் இன்று (23.06.2008) திங்கட்கிழமை நடைபெறுகின்றது

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை றோட்,*
*குளப்பிட்டி சந்தி அருகாமை,*
*கொக்குவில் மேற்கு.*
*தொ.பே.இல: 0771307149*

தகவல்:
த.சிவானந்தராசா (சிவம்) குடும்பம்
(சிறியதந்தை) (75665)

### *நன்னித்தம்பி இராசரத்தினம்*



**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**

மலேசியா, கோலாலம்பூரை பிறப்பிடமாகவும், சுன்னாகம், கொத்தியாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி இராசரத்தினம் (உரிமையாளர், நாகம்ஸ் சினிமா, நாகம்ஸ் பாட்டா, நாகம்ஸ் பான்சி, சிவா ஸ்ரோர்ஸ், யாழ்.பெயின்காடின், யாழ்- சுன்னாகம், நாகம்ஸ் மதுபானசாலை, விஷ்ணு விகார் -தெஹிவளை) நேற்று முன்தினம் (21.06.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி- நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக் கணவரும், கனகரத்தினம் (மலேசியா), கனகபூசணம், அரசரட்ணம் (நாகம்ஸ் பாட்டா) ஆகியோரின் சகோதரனும், ரதனி, ராஜ்குமார் (நாகம்ஸ் M.P), சதீஸ்குமார் (சுவிஸ்), ரஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரன் (யாழ் பெயின் காடின்), சிவகுமார்(சிறி ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), மதிவதனி ஆகியோரின் மாமனாரும், சந்துஜன், டினிசா, சிவானுஜன், சிவராஜி, சுஜிவுா, வேணுகா, சுஜீவன் ஆகியோரின் பாசமிகு பேரனும், சச்சிதானந்தம், பத்மாதேவி, ராஜேஸ்வரி, புவனேஸ்வரி, ஆகியோரின் மைத்துனரும், சுந்தரலிங்கம் (எஞ்சினியர் - மலேசியா), மேகவர்ணம் (இரசாயன கூட்டுத்தாபனம், பரந்தன்), அருணாசலம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (23.06.2008) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.* (75634)

தகவல்:
இ. ராஜ்குமார் (மகன்)

## 25.ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராஜேஸ்வரி சிவராஜா
### (மண்டைதீவு)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16.04.1946 | 23.06.1983 |

**அன்பின் உறைவிடமே**
**அமைதியின் திருவுருவே**
**பாசத்தின் பிறப்பிடமே**
**குடும்பத்தின் குலவிளக்கே**
**எத்தனை ஆண்டுகள் சென்றாலும்**
**உம் இனிய வதனமும் நினைவுகளும்**
**எம்மை விட்டு என்றுமே நீங்காதம்மா**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

என்றும் உமது ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2008

# இந்து நாகரிகம் - 01

ஆசிரியர் :- திரு.ரதன் [வவுனியா]

**01 தொடக்கம் 05 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.**

01. கணபதி கொண்டுள்ள கணங்கள் எத்தனை?
1) 08 2) 18 3) 32 4) 27

02. வேதநூல், சைவநூல் என்றிரண்டே நூல்கள் வேறுரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள்... என்ற பாடல் உள்ள நூல் எது?
1) திருமந்திரம். 2) சிவஞானபோதம்.
3) சிவஞானசித்தியார். 4) திருவாசகம்.

03. "அங்கம் ஒராறும் அருமறை நான்கும் செய்த சிவனே" என வேதத்தைச் சிறப்பித்தவர் யார்?
1) சம்பந்தர். 2) அப்பர்.
3) சுந்தரர். 4) மாணிக்கவாசகர்.

04. "வேதத்தைவிட்ட அறமில்லை; வேதத்தில் ஒத்ததாகும் எல்லாமுள...." என வேதத்தின் சிறப்பைக் கூறும் நூல் எது?
1) திருவாசகம். 2) திருமந்திரம். 3) புராணம். 4) ஆகமம்.

05. சதாசிவ மூர்த்தியினுடைய தற்புருடம் முதலாகிய நான்கு முகத்தினிடமாகத் தோன்றிய நூல் எது?
1) இதிகாசம். 2) ஆகமம். 3) வேதம். 4) உபநிடதம்.

**06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்களில் அமைந்துள்ள வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் தரப்பட்டுள்ள அடைப்பு களில் எழுதுக.**

06. சிந்துவெளி நாகரிகத்தைத் தோற்றுவித்தவர் ஆரியர். ( )
07. இந்துமதத்தின் தொல்பொருளின் தந்தை என சிறப்பிக்கப்படுபவர் சேர்ஜோன் மார்சல். ( )
08. சாவித்திரி என்பது சூரியக் கடவுளுக்குரிய மந்திரமாகும். ( )
09. ஆட்சிகம், உத்தராட்சிகம் ஆகிய இரு பகுதிகளை உடையது சாம வேதமாகும். ( )
10. ரிதஸ்யகோபன் என வேதகாலத்தில் வர்ணன் அழைக்கப்பட்டான். ( )

**11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

11. இருக்கு வேதத்தில் காணப்படும் சங்கிதைகள் யாவை?
..........................................................................................
12. யசுர் வேதத்தின் மந்திரம் ஓதுபவர்களை எவ்வாறு அழைப்பர்?
..........................................................................................
13. வேதத்தில் பிரமகாண்டம் என அழைக்கப்படும் காண்டம் எது?
..........................................................................................
14. வேதத்தில் உள்ள காயத்திரி மந்திரத்தின் சிறப்பைக் கூறும் வேதங்கள் எவை?
..........................................................................................
15. மீமாம்சையின் இரண்டு பிரிவுகளையும் எழுதுக.
..........................................................................................

**16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிரப்புக.**

16. முருகனுக்குரிய சடாட்சர மந்திரம் .............................. ஆகும்.
17. இறைவனோடு நெருங்கியிருத்தல் .............................. எனப்படும்.
18. பொலநறுவை, சோழர் ஆட்சிக்காலத்தில் .............................. என அழைக்கப்பட்டது.
19. .............................., ..............................
என்பன ஈழத்திலுள்ள பழைமை வாய்ந்த விஷ்ணு தலங்களாகும்.
20. கிருகஸ்தம் .............................. நிலையைக் குறிக்கும்.

### பகுதி-I
**எல்லா வினாக்களுக்கும் விடைதருக.**

01. திருக்கோணேஸ்வர தலம் பற்றி விவரிக்குக.
02. கௌமாரம் மதப்பிரிவு பற்றிக் கூறுக.
03. ஈழத்து இந்துமத வரலாற்றை 19 ஆம் நூற்றாண்டைக் கருத்திற்கொண்டு எழுதுக.
04. ஆரிய சமாஜம் பற்றி விளக்குக.
05. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவப்பணியை விளக்குக.

### பகுதி-II
**எவையேனும் இரு வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.**

01. அ) மடங்களும் ஆதீனங்களும் தென்னக வரலாற்றின் எக்காலப் பகுதியில், எந்தச் சூழ்நிலையில் பிரபல்யம் அடைந்தன என்பதனை விளக்குக.
ஆ) மடங்களும் ஆதீனங்களும் ஆற்றிய சமயப்பணிகள் எவை?
02. அ) புராணங்கள் என்றால் என்ன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.
ஆ) புராணங்களின் பஞ்ச இலட்சணங்களைக் குறிப்பிடுக.
இ) சமய வளர்ச்சிக்குப் புராணங்கள் ஆற்றிய பங்களிப்புக்களைத் தருக.
03. அ) நவீனகால சீர்திருத்த இயக்கங்கள் எவை?
ஆ) பிரம்ம சமாஜத்தின் பணிகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
04. அ) தர்மசாஸ்திரம் எழுந்ததன் முக்கிய நோக்கம் என்ன?
ஆ) ஸ்மிருதி என்ற சிறப்புப்பெயர் ஏன் ஏற்பட்டது?
இ) தர்மசாஸ்திரம் கூறும் ஒழுக்கங்களையும் புராதனகால அரசியல் நீதி ஒழுக்கங் களையும் சுருக்கமாகத் தருக.

### பகுதி-III
**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடைதருக.**

01. பிறமத அழிவிற்காக நாயன்மார்கள் ஆற்றிய சேவைகளை விவரிக்குக.
02. சமுதாயம் முழுவதையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறப்பு நூலாக பகவத்கீதை அமைந்து காணப்படுவதற்கான காரணங்களை விரிவாகத் தருக.
03. 19ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் மேல்நாட்டவரது ஆதிக்கத்தினால் இந்துமதம் நலிவடைந்தபொழுது மீண்டும் இந்துமதம் தழைத்தோங்க ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக.
04. தென்கிழக்காசிய நாடுகளில் இந்துநாகரிகம் பரவி செல்வாக்குப் பெற்றமையை விவரிக்குக.

**(இந்த வினாத்தாள் முற்றியது)**

## க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2008

# புவியியல் - 01

ஆசிரியர் :- திரு.P.S.குமரன் B.A (Hons) [யாழ்]

**இப்பகுதியிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. சூரியனின் நண்பகல் கதிர்கள் மத்தியகோட்டில் விழும் காலம்,
1) ஜூன் - 21, டிசம்பர் - 22 2) ஜூன் - 21, மார்ச் - 21
3) மார்ச் - 21, செப்ரெம்பர் - 23 . 4) செப்ரெம்பர் - 23, டிசம்பர் - 22
02. பின்வருவனவற்றுள் எது ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பாவில் அதிஉயரமான மலைச் சிகரத்தைத் தருகிறது?
1) எவரெஸ்ட், கிளிமஞ்சரோ, எல்ப்ரஸ். 2) எவரெஸ்ட், கிளிமஞ்சரோ, அன்னபூரண.
3) எவரெஸ்ட், எல்ப்ரஸ், கென்யா. 4) எவரெஸ்ட், கிளிமஞ்சரோ, கென்யா.
03. உலகில் புவியதிர்ச்சியும் எரிமலைகளும் அடிக்கடி நிகழ்வது,
1) பிலிப்பைன்ஸ். 2) பாகிஸ்தான். 3) ஜப்பான். 4) ஐக்கிய அமெரிக்கா.
04. குறை என்பது,
1) பாறைகள் உடைவுத்தளத்தின் வழியாக அசைந்து பெயர்தல்.
2) பாறைகள் மடிப்புக்குள்ளாகுதல்.
3) பாறைகள் பிரிந்தழிதல்.
4) பாறைகள் கரைசலாக்கத்திற்கு உட்படுதல்.



05. மேலுள்ள படத்தில் காற்றின் செய்முறை குறிப்பிடப்பட் டுள்ளது. அதன் சரியான விடைத்தொகுதி,
1) வட அரைக்கோளத்தில் முரன்சூறாவளியும், சூறாவளியும்
2) வட , தென் அரைக்கோளங்களில் முரன்சூறாவளியும், சூறாவளியும்.
3) தென் அரைக்கோளத்தில் முரன்சூறாவளியும், சூறாவளியும்.
4) வட , தென் அரைக்கோளங்களில் சூறாவளியும், முரன்சூறாவளியும்.
06. உலக வனத்தினம்,
1) மார்ச் - 21 2) ஏப்பிரல் - 22 3) ஜூன் - 5 4) செப் - 23
07. இலங்கையில் நிலச்சரிவால் அதிகமாகப் பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்கள்,
1) பதுளை, கண்டி, மாத்தளை, நுவரெலியா.
2) பதுளை, மொனராகல, இரத்தினபுரி, நுவரெலியா.
3) கண்டி, யாழ்ப்பாணம், மாத்தளை, காலி.
4) பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா, கேகாலை.
08. மக்மா இறுகுவதனால்,
1) தீப்பாறைகள் உருமாற்றத்திற்கு உட்படுதல்.
2) தீப்பாறைகள் உருவாகுதல்.
3) அடையற்பாறைகள் உருவாகுதல்.
4) அடையற்பாறைகள் உருமாற்றத்திற்கு உட்படுதல்.
09. இரும்புத்தாது அதிகமாகக் காணப்படுவது,
1) பழைய பளிங்குருப் பாறைகளில். 2) மயோசின்கால அடையற்பாறைகளில்.
3) இடைக்கால அடையற்பாறைகளில். 4) உருமாறிய பாறைகளில்.
10. அசுபெத்தோசு என்பது,
1) உருமாறிய பாறைகள். 2) தள்ளற் பாறைகள்.
3) அடையற்பாறைகள். 4) தீப்பாறைகள்.
11. உலக ஓசோன் தினம்,
1) செப் - 16 2) நவ - 25 3) ஏப்பிரல் - 23 4) ஜூலை - 06
12. வளிவடிகை என்பது,
1) சாய்வுகளிலிருந்து குளிர்ந்த காற்று வடிந்து பள்ளத்தாக்குகளிலும், தாழ்நிலங்களிலும் திரளும் தோற்றப்பாடு.
2) வளியின் ஈரப்பதன்.
3) வளிமண்டலத்தால் புவிக்கு வெளியிடப்படும் கதிர்வீச்சு.
4) வளிமண்டலத்தில் கட்புலனாகாத நிலையிலுள்ள நீராவி.
13. கண்டமேடை என்பது,
1) கண்டங்களின் எல்லைகளை அண்மித்த ஆழமற்ற கடற்படுக்கை.
2) கண்டங்களின் எல்லைகளை அடுத்து சரிந்துசெல்லும் இடம்.
3) கடல்வாழ் உயிரினங்கள் அதிகமாக வாழும் இடம்.
4) கரையோரங்களை அடுத்து கப்பல்கள் தரித்துநிற்கும் ஆழமான பகுதி.
14. சீவு என்பது,
1) நெடுமணற்குன்று. 2) ஒருவகை பார்கன் குண்டு.
3) செம்மறியுருப்பாறை. 4) தரைக்கீழ் குகை.
15. கண்டபனிக்கட்டியாற்று நகர்வுடன் தொடர்புபட்ட புவிச்சரிதவியல் காலம்,
1) கொலசின் காலம். 2) மயோசின் காலம்.
3) கேம்பிறியன் காலம். 4) பிளைத்தோசின் காலம்.
16. தரை மொறேன்,
1) தெளிவான பனியோடைப் படிவு. 2) காற்றின் படிவு.
3) கடலலையின் படிவு. 4) தரைக்கீழ் நீரின் கரைசல்.
17. உலக வெப்பநிலையாக்கத்திற்கு எதிராகக் காபன்வரி கொண்டுவந்த நாடு,
1) ஐக்கிய அமெரிக்கா. 2) அவுஸ்திரேலியா. 3) நோர்வே. 4) நியூசிலாந்து.
18. ஆட்டிக் அயனவலயப் பகுதியில் காணப்படும் பிரதான மண்வகை,
1) பொட்சோல், இலற்றோசொல். 2) பொட்சோல், சோணோசன்.
3) இலற்றோசொல். 4) சோணோசன்.
19. பனிக்கட்டியின் ஓரத்தில் விசிறி வடிவில் அகன்ற படிவாகப் படிந்திருப்பது,
1) வெள்ளச் சமவெளி. 2) அரிப்புச் சமவெளி.
3) வெளியடையற் சமவெளிகள். 4) பொங்குமுகம்.
20. நிலநீர்ப்பீடம் என்பது,
1) தரைக்கீழ் நீரளவு. 2) நீர்த்தாங்கு படுக்கை.
3) ஊடுவடியப்படும் நீர். 4) நீர்நிரம்பியவலயத்தில் மேற்பாகம்.
21. இலங்கையின் 1981 ஆம் ஆண்டு கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின்பின் சராசரி உயர் நீர்மட்டத்தில் இருந்து கரையோரப் பிரதேசத்தின் தரைநோக்கிய எல்லையைச் சரியாகத் தருவது,
1) 300 மீற்றர். 2) 100 மீற்றர். 3) 400 மீற்றர். 4) 150 மீற்றர்.
23. இலங்கையின் எக்கடலோரப் பகுதியில் கூடுதலான தின்னலும், படிதலும் இடம் பெறுகின்றன?
1) தென் கரையோரம். 2) வடமேற்குக் கரையோரம்.
3) வடகிழக்குக் கரையோரம். 4) தென்மேற்குக் கரையோரம்.
24. அயன மழைக்காடுகள் அதிகளவு அழிக்கப்படுவது,
1) தென்னிந்தியாவில். 2) இலத்தீன் அமெரிக்காவில்.
3) ஆபிரிக்காவில். 4) ஆசியாவில்.
25. தளர் பாறைப்படை என்பது,
1) பிரிந்தழிதலாலும், பிரிதலாலும் பெறப்படும் பாறைத்துண்டுகள்.
2) காற்றினால் கொண்டுசெல்லப்படும் பாறை.
3) பனியாற்றினால் கொண்டுசென்று கைவிடப்படும் பாறை.
4) சாய்வுநிலப் பாறை துண்டு துண்டுகளாக உடைந்து கீழ் இறங்கல்.
26. தொம்போலோ என்பது,
1) பிரதான நிலத்திணிவுடன் மணற்படிவினால் இணைக்கப்பட்ட ஒரு தீவு.
2) காற்றினால் பாலைவன எல்லைகளில் படியவிடப்பட்ட நெடுமணற்குன்றுகள்.
3) பனியாற்றினால் மட்போர்வை நீக்கப்பட்ட கரடுமுரடான நிலம்.
4) ஆற்றிடையில் படிவுற்றுள்ள மணற்படை.
27. அவுஸ்திரேலியாவின் வடகிழக்கு கடற்பகுதிகளில் உருவாகும் சூறாவளி அழைக்கப் படுவது,
1) தைப்பூன்ஸ். 2) வில்லிவீலிஸ். 3) ஹரிக்கேன்ஸ். 4) பாகியஸ்.
28. நீள்குடாக் கரைக்கோடுகள் என்பது,
1) கரையோரத்தில் அமிழ்ந்துள்ள நிலப்பகுதி.
2) பல பொங்குமுகங்களையுடைய கடற்கரைக்கோடுகள்.
3) பனியாற்றினால் ஏற்படுத்திய கரையோரம்.
4) அலையினால் மண்நீள் வரம்புகளாகப் படியவிடப்பட்ட கரை.
29. எல் நினோ காலநிலை எனப்படுவது,
1) [illegible] ஏற்படுவது. 2) கடும் குளிர் நிலவுதல்.
3) [illegible]நிலை அனர்த்தம். 4) நிலநடுக்கம்.

**(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி வரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தைக் கட்டியெழுப்பும் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குமான அமைச்சு
## வடக்கு, கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம்
## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளமைக்கும் திட்டம் (TAARP) உட்பிரிவு 'B'
## ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் 2027 SRI (SF) நன்கொடை 0006 - SRI (SF)

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மற்றும் தோட்ட உட்கட்மைப்பு அபிவிருத்திக்குமான அமைச்சின் கீழ் செயற்படும் நெக்டெப் மற்றும் ராப் / நெக்டெப் (TAARP/NECCDEP) திட்ட அலுவலகத்திலும் மாவட்டத் திட்ட அலுவலகங்களிலும் உள்ள வெற்றிடங்களை நிரப்பு வதற்காக பின்வரும் தகைமையும் அனுபவமும் உடையவர்களிடம் இருந்து கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொதுவான நிபந்தனைகள் : பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானதும் தற்காலிகமானவையும் ஆகும். நியமனங்கள் முதலில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலும் பின்பு செயற்திறன் அடிப்படையிலும் தேவையின் அவசியத்தின் அடிப்படையிலும் 22 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்று நிருபத்துக்கு அமைவாக நீடிக்கக் கூடியதுமாகும்.

02. வயதெல்லை: விண்ணப்பதாரிகள் 57 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். 55 வயதுக்குக் குறைவானவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03. விண்ணப்பதாரிகள் : இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். (2) நல்ல ஆரோக்கியமுள்ளவராகவும் திட்டப் பிரதேசத்தில் எவ்விடத்திலும் சேவையாற்றும் உடற்தகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பிக்கும்முறை: விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித் தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழிற் தகைமைகள்/ அநுபவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி விண்ணப்பத்தினை அவர்களாகவே தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால்மூலம் 2008.07.07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் *திட்டப் பணிப்பாளர், வடக்குக் கிழக்குக் கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம் (NECCDEP) 56, மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை* என்றமுகவரிக்குக்கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். தகைமை அடிப்படையில் தயாரிக்கப்படும் குறும்பட்டியல் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

05. சம்பளம்: இருதரப்புச் சம்மதத்துடன் முகாமைத்துவச் சேவை சுற்றுநிரூபம் 33 இற்கு அமைவாக பேசித் தீர்மானிக்கப்படும்.

06. தெரிவு செய்யும் முறைமை: தகைமை அடிப்படையில் குறுகிய அட்டவணையில் இருந்து நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். வேண்டப்படும் தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கிடைக்கத் தவறும் இடத்து அதற்குக் குறைந்த அடுத்த மட்டத் தகைமையுடைய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**01. மாவட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் பதவி (பதவி வெற்றிடங்கள் 01)**

**கடமை நிலையம் :** மாவட்டத் திட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

**கடமைகளும் பொறுப்புக்களும்:**

* மாவட்டத் திட்ட அலுவலகத்தை வினைத்திறனுடன் முகாமைத்துவப்படுத்தல். அதன் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்து அவற்றின் செயற்பாடுகளை நிறைவேற்று மதிப்பீடு செய்தல்.
* நடைமுறைப் படுத்தலின்போது ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடன் எடுத்தல்.
* திட்ட, நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதிமுகவர்களுடனும் மற்றும் பங்குதாரர்களுடனும் நெருங்கிய நட்புறவினை ஏற்படுத்திப் பேணிவரல்.

**தேவையான கல்வித் தகைமை**

1. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய/கட்டிணைப்பு அங்கத்துவத்துடனான அல்லது, பட்டப்பின்படிப்புடனான ஐந்து வருட அனுபவம்

   *அல்லது*

   இலங்கை நிர்வாக சேவையில் I ஆம் தர அல்லது அதற்கு சமனான சேவையில் 1 தர ஐந்து வருட முன் அனுபவம்.

* ஆங்கில அறிவிலும் கணனி செயற்பாட்டிலும் திறமை.

**02. திட்ட முகாமைத்துவ நிபுணர் (பதவி வெற்றிடம் 01)**

**கடமை நிலையம் :** மாவட்டத் திட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

**கடமைகளும் பொறுப்புக்களும்:**

* அமுலாக்கல் வழிமுறைகளை அபிவிருத்தி செய்தலும் திட்ட அதி முக்கிய நடவடிக்கைகளை அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்துச் செயற்படும் ஆற்றல். திட்டத்தில் அமுல்படுத்தப்படும் வேலைகளின் தரத்தைக் கண்காணித்தல்.

**தேவையான கல்வி மற்றும் தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய/கூட்டிணைப்பு அங்கத்துவத்துடனான அல்லது பட்டப் பின்படிப்புடனான ஐந்து வருட அனுபவம்

   *அல்லது*

2. இலங்கை நிர்வாக சேவையில் II/II தர அல்லது அதற்கு சமனான சேவையில் II/II தர ஐந்து வருட அனுபவம்.

* ஆங்கில மொழியிலும் கணனி செயற்பாட்டிலும் திறமை.

**03. கணக்காளர் பதவி (பதவி வெற்றிடம் 01)**

மாவட்டத் திட்ட அலுவலகம், அம்பாறை.

**தேவையான கல்வித் தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய/கூட்டிணைப்புடனான அல்லது பட்டப் பின்படிப்புடனான 5 வருட அனுபவம்

   *அல்லது*

2. இலங்கை கணக்காளர் சேவையில் தரம் II / I அல்லது அதற்கு சமனான தரத்தில் ஐந்து வருட அனுபவம்.

**04. வாழ்வாதாரமற்றும்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதவி வெற்றிடம் 01)**

**கடமை நிலையம் :** மாவட்டத் திட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

**கடமைகளும் பொறுப்புக்களும்:**

* உள்ளாற்றல் உள்ள வாழ்வாதார தேவைகளைப் பொருத்தமான விதத்தில் தேவைக்கேற்ப பரிந்துரைத்தல்.
* உகந்த வாழ்வாதாரத் திட்டங்களை இனங்கண்டு திட்டங்களைத் தயாரித்து வழங்கி அமுலாக்க அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு உதவுதல்
* தெரிவு செய்யப்பட்ட வாழ்வாதாரத் திட்டங்களை முகாமைத்துவம் செய்யவும் அமுலாக்குவதற்கும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்கல்.

**தேவையான கல்வித் தகைமைகளும் அனுபவமும்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானம், சமூகவியல் அல்லது தொடர்புடனான பாடத்துடனான பட்டப் பின்படிப்பு
2. வாழ்வாதாரத் திட்ட நடவடிக்கைகளில் எட்டு வருட முன் அனுபவம்.

**05. தரவுத்தள நிபுணர் பதவி (பதவி வெற்றிடம் 01)**

**கடமை நிலையம் :** திட்ட அலுவலகம், திருகோணமலை

**தரவுத்தள நிபுணராகக் கடமைபுரிபவர் கீழ்வருவனவற்றில் திட்டப் பணிப்பாளருக்கு உதவிபுரிய வேண்டும்.**

* நெக்டெப் தரவுத்தளம்/ தகவல் முகாமைத்துவ முறைமையில் அபிவிருத்தி.
* திட்ட ஊழியர்க்கும் மற்றைய PPS, DPSS ஊழியர்களுக்கும் பயிற்சி வழங்கல்
* தரவுத்தள அபிவிருத்தி மற்றும் வலைப்பின்னலில் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்
* பாவனையாளர்களை GIS மதிப்பீட்டில் பயிற்சியளித்தல்.
* மாகாண/ மாவட்ட தரவுத்தளங்களை இணைப்பதற்குத் தரவுத்தள முகாமைத்துவ உட்கட்டமைப்பை வடிவமைத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

**தேவையான கல்வி மற்றும் தகைமைகள்**

1. கணனி விஞ்ஞானத்தில் பட்டப்பின் படிப்பு.
2. தரவுத்தள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தில் ஆகக்குறைந்தது எட்டு வருட முன் அனுபவம்.
3. தகவல் முகாமைத்துவம் /GIS இல் பயிற்சிகளை மேற்கொண்ட அனுபவம்.

**06. திட்டமிடலாளர் பதவி *(பதவி வெற்றிடங்கள்)***

**கடமை நிலையம் :** மாவட்ட திட்ட அலுவலகம் அம்பாறை

**கடமைகளும் பொறுப்புகளும்:**

இப்பதவியை வகிப்பவர் திட்ட நடவடிக்கைகளைத் திட்டமிடல், அமுல்படுத்தல், கண்காணித்தல், ஆய்வுசெய்வதில் மாவட்டத் திட்டப்பணிப்பாளருக்கு உதவுவது, திட்ட முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரிப்பது, திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலுக்குத் தொடர்புடைய தரவுகளைச் சேகரித்தல் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதில் திட்டப் பணிப்பாளர், மாவட்டத் திட்டப் பணிப்பாளருக்கு உதவுவது.

**தேவையான கல்வித் தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் பட்டய/கூட்டிணைப்புடனான அல்லது, பட்டப் பின்படிப்புடனான ஐந்து வருட அனுபவம்

   *அல்லது*

2. நிர்வாக சேவையில் தரம் II / I ஆம் தர அல்லது அதற்கு கூடுதலான அல்லது சமனான தர ஐந்து வருட அனுபவம்.

**07. தொழில்நுட்பவியலாளர் (குடிசார்) *(பதவி வெற்றிடம் 01)***

**பதவி வெற்றிடம் -** மாவட்டத் திட்ட அலுவலகம், யாழ்ப்பாணம்.

**கடமைகளும் பொறுப்புக்களும்:**

1. சகல உட்கட்டுமான வேலைத்திட்டங்களுக்குமான வேலை மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அவற்றின் கட்டுமானங்களை மேற்பார்வை செய்து மாவட்டத் திட்டப் பணிப்பாளருக்கு உதவுதல்.
2. கிராம மட்ட நிறுவனங்கள், பங்காளர் நிறுவனங்கள் ஆகியோருக்கு வேலைத் தளங்களை ஒழுங்குபடுத்தி வேலைகளைத் துரித கதியில் குறித்த கால அட்டவணையில் நிறைவேற்ற உதவுதல்.
3. நிறைவேற்றப்பட்ட குடிசார் கட்டுமான வேலைகளுக்கு அளவிட்டு தாள்களைத் தயாரித்துக் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்க உதவுதல்.
4. உட்கட்டுமான வேலைகளைக் கண்காணித்து வாராந்தம் மாவட்டத் திட்ட அலுவலகத்துக்கு அறிக்கையிடல்.

**தேவையான கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்**

1. குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இரண்டு வருடங்களுக்குக் குறைவில்லாத பயிற்சி பெற்ற டிப்ளோமா சான்றிதழ் அத்துடன் சான்றிதழ் பெற்ற பின் எட்டு வருட குறித்த விஷேட துறையில் அனுபவம்.

**எஸ்.எம்.குருஸ், திட்டப் பணிப்பாளர், நெக்டெப்.**

## வலி தென்மேற்கில் வெங்காயம் விலை உயர்வு

வலி.தென்மேற்கு, ஜூன் 23

மானிப்பாய், பண்டத்தரிப்பு மற்றும் சங்கானை சந்தைகளில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

மரக்கறிகளின் விலைகள் ஓரளவு குறைவடைந்த போதிலும் வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை - வலி.தென்மேற்கு பிரதேசத்தில் விவசாயிகளில் பலர் வெங்காய நடுகையை மேற்கொண்டு வருகின்றனர். வழமையாக வைகாசிப் போகத்திலேயே வெங்காய நடுகை நாடை பெறுகின்ற போதிலும், இந்த முறை ஆனி மாதத்திலும் வெங்காய நடுகையை விவசாயிகள் மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (202-135)

## சிரமதானப் பணிகள்

நவாலி, ஜூன் 23

உலக சுற்றாடல் தினத்தையொட்டி பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்தினர் பண்டத்தரிப்புச் சந்தைப் பகுதி மற்றும் அதனுடன் இணைந்த வீதிகள், விளான் இந்து மயானம் என்பவற்றை சிரமதான மூலம் துப்புரவு செய்துள்ளனர். (202-100)

* * *

நவாலி, ஜூன் 23

சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் பிரதேசசபை பல சிரமதான வேலைகளை செய்துள்ளது.

இடிகுண்டு அதனுடன் இணைந்த வீதிகள், கட்டுடை வீதி, அங்குள்ள நீர் வழங்கல் திட்டப் பகுதி, வழுக்கையாறு இந்து மயானம் என்பவற்றைச் சிரமதானப் பணிகளை பிரதேச செயலாளர் தலைமையில் மேற் கொண்டுள்ளது. (202-100)

## யாழ்.ப.நோ.கூ.சங்க கூட்டுறவு நகர் இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் திறந்து வைக்கப்படும்.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (202-224)

## விழுந்த தேங்காயைத் தடுக்க முயன்றவரின் கை முறிந்தது

யாழ்ப்பாணம்,ஜூன் 23

மரத்திலிருந்து வீழ்ந்த தேங்காயை தடுத்தவரின் கை முறிந்தது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி, கெருடாவிலில் இடம் பெற்றது.

தடியினால் பிடுங்கிய தேங்காய் தலைக்கு நேராக வந்தபோது கையினால் தடுத்த போதே இச்சம்பவம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த வீ.சடாஸ்வரம் (வயது 27) என்பவர் கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-207)

எம்புரோடிங் ரை

நீண்டகால பாவனைக்கு உத்தரவாதம்
பாடசாலை மாணவர்களுக்குரிய ரை
69.00 லிருந்து
எஸ். எஸ். யசோதரன் ஆட்ஸ்
212,கோவில் வீதி, நல்லூர்

கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 23.06.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீன் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி.
* P.ரவி - சாவகச்சேரி.
* சிற்றி பாம் றேடர்ஸ் - கல்வியங்காடு.

(75626)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டி வவுனியாவில் சனியன்று ஆரம்பமாகின்றது

## முதலாவது அணி நாளை புறப்படும்

யாழ்ப்பாணம், ஜூன்23

வடக்கு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் சனிக்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் யாழ். பாடசாலைகளின் முதலாவது அணி நாளை புறப்படுகின்றது.

நாளை புறப்படும் அணியில் 301 வீர, வீராங்கனைகளும் 58 ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள் செல்கின்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 28ஆம் திகதியில் இருந்து அடுத்த மாதம் 08ஆம் திகதிவரை வவுனியாவில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இப்போட்டிகள் இடம்பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் வடமாகாண கல்வி அமைச்சினால் செய்யப்பட்டு இருந்த போதிலும் இறுதிநேரத்தில் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டிருந்தன.

யாழ்.மாவட்ட வீர,வீராங்கனைகள் செல்வதில் ஏற்பட்ட தடங்கலைத் தொடர்ந்து சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் கொண்டு சென்றதைத் தொடர்ந்து அவர் வடமாகாண ஆளுநருடன் தொடர்பு கொண்டு அந்தப் போட்டியை இடை நிறுத்தியிருந்தார்.

மீண்டும் இப் போட்டிகள் 28ஆம் திகதி ஆரம்பமாவதைத் தொடர்ந்து யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் முதலாவது அணியினர் இன்று தமது பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர். முதலாவது அணியில் 301 வீர, வீராங்கனைகளும் 58 ஆசிரியர்கள், பயிற்சியாளர்களும் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இருந்து செல்லும் வீர, வீராங்கனைகளின் போக்குவரத்து, உணவு மற்றும் தேவைகளை பூர்த்தி செய்யும் பொறுப்பை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுக்கொண்டுள்ளார்.

முதலாம் நாள் கூடைப்பந்தாட்டம், சதுரங்கம், பூப்பந்தாட்டம், மேசைபந்தாட்டம் கிரிக்கெட் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளும் 310பேர் கொண்ட இரண்டாவது அணி எதிர்வரும் 26ஆம் திகதியும் 289பேர் கொண்ட மூன்றாவது அணி எதிர்வரும்30ஆம் திகதியும் புறப்படவிருக்கின்றன. (1-86)

## புத்தூர் மேற்கில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணியின் விவரம் வருமாறு:-

*பி.ப. 3.30 மணி - நாவற்குழி எல்லாளன் வி.க. அணி எதிர் தெல்லிப்பழை நாமகள் வி.க. அணி

*பி.ப 4.30 மணி - ஊரெழு றோயல் வி.க. 'பி' அணி எதிர் இமையாணன் மத்திய வி.க. அணி (1)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்; பற்றீஸியன் கால் இறுதியாட்டத்துக்கு தகுதி

வலி.வடக்கு, ஜூன் 23

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் அமரர்வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்திவரும் மட்டுப்படுத்திய ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் பற்றீஸியன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று கால் இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் அரியாலை மத்தி விளையாட்டுக்கழகமும் பற்றீஸியன் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்தி விளையாட்டுக்கழகம் 35.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது.

பிரதீபன் 45, கிருபா 36, நவநீதன் 14 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள். லவதீசன்6 விக்கெட்டுக்களையும் பால முரளி 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

135 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றீஸியன் விளையாட்டுக்கழகம் மிகவும் இலகுவாக 21.2 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சுஜீவன் ஆட்டமிழக்காது 34, ஜெயந்திரன் 49, மனோஜ்13 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள். கௌரி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (1-86)

### அப்பாடா! இது என்ன? சாகஸமா அல்லது விளையாட்டா?



தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் பன்னாலை கணேசா இளைஞர் சேவைகள் மன்ற வீரர் மு.கிருஷ்ணா உயரம் பாய்வதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

## மாற்று ஆற்றல் உள்ளோருக்கான விளையாட்டுப்போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன் 23

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கு இடையேயான மாற்று ஆற்றல் கொண்ட சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இப்போட்டிகள் பார்வைக் குறைபாடு உடையவர்கள், உளப்பாதிப்பு, மனவளர்ச்சி குன்றியோர், கேட்டல், பேச்சு, அங்கவீனம் உடையவர்களுக்கென தனித்தனியாக இடம்பெற்றன.

கீழ்பிரிவு பார்வைக்குறைபாடு உடைய மாணவர்களின் பெண்களுக்கான பெறுபேறுகள் வருமாறு: (குழு ஏ)

50 மீற்றர் ஓட்டம்- த.தர்சோதினி, சி. அனந்தினி (இருவரும் இராமநாதன் கல்லூரி).

100 மீற்றர் ஓட்டம்- த.தர்சோதினி (இராமநாதன் கல்லூரி).

நின்று நீளம் பாய்தல்- சி.அனந்தினி, செ.யோகேஸ்வரி (இராமநாதன் கல்லூரி ).

பந்து எறிதல்-இ.திவ்யந்தி (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), சி.அனந்தினி, ஜெ.யோகேஸ்வரி (இராமநாதன் கல்லூரி).

**ஆண்களுக்கான போட்டிகள்**

50 மீற்றர் ஓட்டம்- பொ. நிரோஜன், த.அமலநிதுசன், ந.தினேஸ் ( இருவரும் இராமநாதன் கல்லூரி).

100 மீற்றர் ஓட்டம்- மொ.நிரோஜன் (இராமநாதன் கல்லூரி ).

நின்று நீளம் பாய்தல்-த.அமலநிதுசன், ந. தினேஸ், து.அருண்குமார் ( மூவரும் இராமநாதன் கல்லூரி ).

உளப்பாதிப்பு மனவளர்ச்சி குன்றியோர் **குழு பி: ஆண்கள்-**

50 மீற்றர் ஓட்டம்-டே.றஜீவன்(ஆர்க்), இ.சதீஸ் (சிவபூமி), ய.சாரங்கன் (ஏழாலை சைவ மகாஜன).

100 மீற்றர் ஓட்டம்-டே.றஜீவன், யோ. டிலாசன், பி.சுரேன் (மூவரும் ஆர்க்).

நின்று நீளம் பாய்தல்-இ. திருவரங்கன், பா.சத்தியதரன் (இருவரும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), மோ. டிலான் (ஆர்க்).

**பெண்கள்**

50 மீற்றர் ஓட்டம்- பா.நிசாந்தினி, சோ. கஜனா (தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை), சு.லக்சனா (சிவபூமி).

75 மீற்றர் ஓட்டம்-பா.பருவீனா, வி. ஜெனிமீசா (இருவரும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), பு.பவிதா (தொல்புரம் பாடசாலை).

100 மீற்றர் ஓட்டம்-வி.ஜனிமீசா, பா. பருசனா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), லோ.றொபெக்சினி (ஆர்க்).

நின்று நீளம் பாய்தல்-பா.பருசனா, பூ.தர்சிகா, வி.ஜனிமீசா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்).

பந்து எறிதல்-வி.ஜனிமீசா, பா.பருசனா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), சு.லக்சனர் (சிவபூமி)

கேட்டல்,பேச்சு குறைபாடு

**குழு சி ஆண்கள்**

50 மீற்றர் ஓட்டம்-ஆ.சுபாஸ்கரன் (உயரப்புலம் குணபாலன் வித்தி), இ.டினேஸ் (மானி.மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), மு.குருபரன் (ஏழாலை. தெற்கு அ.மி. த.க. பாடசாலை).

75 மீற்றர் ஓட்டம்-மு.குருபரன் (ஏழாலை. தெற்கு அ.மி.த.க. பாடசாலை).

100 மீற்றர் ஓட்டம்-சி.லக்சன் (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்), அ.மயூரன் (பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்).

நின்று நீளம் பாய்தல்-சி.லக்சன் (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்), இ.டினேஸ் (மானி.மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை).

பந்து எறிதல்-நா.பிரதீபன் (மானி. மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை) ச.தஜீபன் (ஈவினை அ.த.க.பாடசாலை) இ. டினேஸ் (மானி.மெமோறியல் ஆங்கிலப்பாட்சாலை).

**பெண்கள்**

50 மீற்றர் ஓட்டம்-இ.டிலக்சனா (மல்லாகம் கோட்டை அ.த.க.பாடசாலை) சு. சயந்தினி (சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தி.), சு.மயூரி (சங்கரத்தை சின்னம்மா வித்தி).

75 மீற்றர் ஓட்டம் -பா.கபிர்ஜனா (ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), யோ. லோஜினி (மானி.மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை), இ.டிலக்சனா (மல்லாகம் கோட்டைகாடு அ.த.க.பாடசாலை).

100 மீற்றர் ஓட்டம்- பா.கபிர்ஜனா (ஏழாலை ஸ்ரீமுருகன்வித்தியாலயம்), யோ. லோஜினி (மானி.மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), சி.லக்சனா (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்).

நின்று நீளம் பாய்தல்-பா.கபிர்ஜனா (ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்), இ. டிலக்சனா (மல்லாகம் கோட்டைகாடு அ.த.க.பாடசாலை), சி.லக்சனா (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்).

பந்து எறிதல்-பா.கபிர்ஜனா (ஏழாலை ஸ்ரீமுருகன்வித்தியாலயம்), சி.லக்சனா (பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்), பு.சுகந்தினி (சுழிபுரம் ஐக்கிய சங்க த.க. பாடசாலை).

(தொடரும்)

## சாதனை படைத்த பாடசாலைகள்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக்கிண்ணம் சுவீகரித்த மானிப்பாய் மகளிர் கல்லூரி வீராங்கனைகள் அதிபர், ஆசிரிர்களுடன். (படம்: நேசன்)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் வெற்றிக்கிண்ணம் சுவீகரித்த இராமநாதன் மகளிர் கல்லூரி வீராங்கனைகள் அதிபருடன். (படம்: நேசன்)



தென்மராட்சி வலயமட்ட ரீதியாக பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற "செற்றப்" கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் சம்பியனான கைதடி முத்துக்குமாரசாமி மாகாவித்தியாலய வீரர்கள் அதிபர், ஆசிரியர்களுடன். (படம்: நாவற்குழி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# IIS
## Special Online Classes

விசேட Online வகுப்புக்கள் மூலம் மிகக்குறுகிய காலத்தில் Diploma கற்கை நெறிகளை முடித்துக்கொள்ளும் வாய்ப்பினை IIS ஏற்படுத்தி தருகின்றது.

ஆரம்பம்
**23-06-2008**
(பகல் 10.00மணி)

| Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | 2 Months |
| Diploma in Internet Technology | 2 Months |
| Diploma in Desk Top Publishing | 2 Months |

ஓர் பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கபடுவர் உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

கணனிக் கலைக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P :- 021 222 2831

PLC
PEOPLE'S LEASING CO. LTD

## பீப்பில் லீசிங் கம்பனி லிமிட்டட் யாழ்ப்பாணம்

(மக்கள் வங்கியின் முழு உரித்தான நிறுவனம்)

**வாகனம், பொறி விற்பனை**

| இலக்கம் | வகை | உற்பத்தி திகதி |
|---|---|---|
| NPPD 2277 | Toyota Hiace LH 172 | 2000 |
| 250 - 2820 | Toyota Hiace LH 119 | 1992 |
| NPMK 2728 | Motor Bike Honda MD 90 | 2002 |

**பார்வையிடும் இடம் :**
பீப்பில்ஸ் லீசிங் கம்பனி, 82, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

பார்வையிடும் காலம் : 23.06.2008 தொடக்கம் 25.06.2008 வரை
பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
பீப்பில் லீசிங் கம்பனி லிமிட்டட், இல 82, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு :
தொ. இல : 021 222 8031, 021 222 9627

## கண்ணீர் அஞ்சலி

நாகம்ஸ் ஸ்தாபனத்தின் ஸ்தாபகரும் உரிமையாளருமான

**ந.இராசரத்தினம் J.P.**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.
நாகம்ஸ் பாட்டா ஊழியர்கள்.
(75637)

## கேள்திறன் (காது கேட்கும்) கருவி உடன் தேவை

மேலே குறிப்பிட்ட கருவியை விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் உடனே கீழ்க் குறிப்பிட்ட முகவரியிலோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளவும்.

**ஆ.சிவராஜா,**
36, பாரதி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 222 3375
(75654)

## விற்பனைக்கு

பொமனேரியன் பெண் நாய்க்குட்டிகள் வெள்ளை, மண்ணிறம், (G) கினிபிக் விற்பனைக் குண்டு.

K.**பஞ்சாட்சரநாதன்,**
குளங்கரை, ரெயில்றோட், கொக்குவில்.
(75653)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

1 வயது நிரம்பிய பெண் அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **தயாநிதி,**
பிடாரி அம்மன் கோயிலடி,
ஆனைக்கோட்டை. (சி/553464)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி இரட்ணமலர்
பாஸ்கரசிங்கத்தின்
அன்புத் தந்தை
**T.பாலகிருஷ்ணன்**
*(இளைப்பாறிய தபாலதிபர்)*

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை,
பருத்தித்துறை.
(சி/553449)

## இதய அஞ்சலி



சிவத்தமிழ்ச்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் மறைவு சைவ மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேதாரணியப் பெருமானைப் பிரார்த்திப்போமாக. அன்னாரின் சமயப் பணியை சைவ சமய ஸ்தாபனங்கள் தொடர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

க. சோமசுந்தரக்குருக்கள்
செயலாளர், சைவக் குருமார் பேரவை, கோப்பாய்.
(75623)

## கண்ணீர் அஞ்சலி



சைவமும் தமிழும் தழைத்தோங்க தன்னையே முழுமையாக அர்ப்பணித்த துர்க்காதுரந்தரி

கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்களின் மறைவு பேரிழப்பாகும். அன்னையின் புண்ணிய ஆத்மா அம்பாளின் பாதார விந்தங்களில் சாந்திபெற வேண்டிநிற்கின்றோம்

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

## கண்ணீர் அஞ்சலி



சிவத்தமிழ் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

தமிழோடு சைவமும் தழைத்தோங்கச் செய்து
ஒழுங்குடன் ஒழுக்கமும் பண்பாடும் சிறந்திட
அயராது உழைத்திட்ட அருந்தமிழ் அன்னையே
சிவத்தமிழ்ச்செல்வி துர்க்கா துரந்தரி
எனப்பல பட்டங்கள் பெற்றிட்ட மாதாவே
ஏழைக்கும் பேதமின்றி வாழ்வளித்த எம்மரசி
காலக்கணக்கிங்கு தப்பாமல் நகழ்ந்ததனால்
அன்னை துர்க்கைபதம் அணைந்திடவே
அஞ்சலிப்போம்.
(75642)

**நிர்வாக சபையினரும், ஊர்மக்களும்**
அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீசிவபூதவராயர் தேவஸ்தானம்,
*சிவன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*

## திறப்பு விழா அழைப்பு

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் -வ.து-

# கூட்டுறவு நகர்

Coop City

இடம்: **பிரதான வீதி, யாழ்ப்பாணம்**
(வஸ்தியன் சந்திக்கு அருகில்)
காலம்: **2008 ஜூன் 23 திங்கட்கிழமை**
நேரம்: **முற்பகல் 10 மணி**

கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(சி/553451)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

995 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் **12 21 25 53**

**20-06-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5768379 - 5783336
ஜக்பொட் பரிசு ரூபா. 3,263,050/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 327,562 | 10/- | 3,275,620/- |
| 2 இலக்கங்கள் | 30,121 | 20/- | 602,420/- |
| 1 இல. + லக்கினம் | 29,805 | 30/- | 894,150/- |
| 2 இல. + லக்கினம் | 2,727 | 100/- | 272,700/- |
| 3 இலக்கங்கள் | 793 | 500/- | 396,500/- |
| 3 இல. + லக்கினம் | 72 | *5,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,263,050/- | - |
| மொத்தம் | | | 6,301,390/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 391,090 | | 6,801,390/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,994,950/-

தொடர் இலக்கம் 4882164 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 5768954-0-29 |
| ஹம்பாந்தோட்டை | 5774185-3-06 |
| இரத்தினபுரி | 5772792-3-77 |
| கண்டி | 5779224-1-42 |
| கேகாலை | 5775098-4-10 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

SATA-TECH நிறுவனம் வாடிக்கையாளர்களின் வசதி கருதி இல.11/10 B, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடைச்சந்திக்கு அருகில்) எமது புதிய விற்பனை நிலையத்தை 16.06.2008 இல் திறந்துள்ளதனை முன்னிட்டு 30.06.2008 வரைசிறப்புத்தள்ளுபடி விற்பனையில்!



180 சனல் மற்றும்
106 சனல் பார்க்கக்கூடிய பக்கேஜ்
3/6/10/12/18மாத இலவச
கட்டணத்துடன் ரூபா 8250ல் இருந்து

dishtv

★ மற்றும் அனைத்து கேபிள் T.V உபகரணங்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
★ Dish T.V க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்திக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு

**SATA-TECH ENGINEERS**

No 11/10B STANLY ROAD
(Near Muddas Kadai Junction) Jaffna
Phone:- 021 2228812

No 162, K.K.S. Road
Kuapiddy Junction, Kokuvil
Phone:- 021 2225908
(75337)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஜானக பெரேராவின் அறிமுகம் தமிழருக்கான தவறான சமிக்ஞை

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதன் அடிப்படைப் போக் கில் மாற்றம் இருக்கப் போவதில்லை என்பதுதான் ஒரே நிலைப்பாடு.

இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை 'ஒரு குட்டையில் ஊறிய மட் டைகள்தாம்.'

இரண்டு கட்சிகளுமே சிறுபான்மையினரான தமிழர் கள் மீது தங்களது பேரினவாத - பௌத்த, சிங்கள - மேலாண்மை அதிகாரத்தைச் செலுத்தி, அவர்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தும் தமது மேலாதிக்கப் போக்கில் என்றுமே பின்னின்றமை கிடையாது. அதுவே கடந்த அறுபது ஆண்டுகால 'சுதந்திர இலங்கையின்' வரலாறாகும். இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் மாற்றோ, வேறு பாடோ கிடையாது. இதுவே இன்றும் சரித்திரமாக நீடிக் கின்றது.

இப்போதும்கூட, ஈழத் தமிழர்களின் இராணுவ ரீதி யான வலிமையைப் படை நடவடிக்கைகள் மூலம் சித றடித்து, உரிமைகளுக்கான அவர்களது பேரம்பேசும் வலிமையைச் சின்னாபின்னமாக்கி, அவர்களை நிரந்தர அடிமைகளாக்கும் திட்டத்துடன் தமிழர் தாயகத்தின் மீது பெரும் போரைத் தொடுத்து நிற்கிறது ஆளும் கட்சி.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவோ வெளிவேடத் துக்கு சமரசம் பேசுகிறது. அமைதித் தீர்விலும், சமாதா னப் பேச்சிலும், இணக்கப்பாட்டிலும் ஆர்வம் உள்ளது போல இன்று அது காட்டிக் கொண்டாலும், அதன் ஆட் ஒடுக்கி, அடிமைப்படுத்துவதாகவே இருந்தது என்பதை நாம் மறந்து விடமுடியாது.

இந்தச் சமயத்திலும் கூட, சமாதானத் தீர்வில் ஆர்வம் உள்ள கட்சி போலத் தன்னைக் காட்டிக் கொண்டு மறுபுறம் இராணுவ வெறிப் போக்கில் தீவிரம் கொண்ட ஒருவரை முன்னிலைப்படுத்தி பிழையான சமிக்ஞையை அது வெளிப்படுத்துகின்றது.

எதிர்வரும் வடமத்திய மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனது முதலமைச்சர் வேட்பாளராக மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை முன்னிறுத்தப் போகின்றது. இனி அக்கட்சியின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளராகவும் அவரே பணிபுரியப் போகின்றார் என் றும் கூறப்படுகின்றது.

இது, தமிழர் தரப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி கொடுக் கும் ஓர் அபாய எச்சரிக்கையாகவே கருதப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழரின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத் துக்கு எதிரான சிங்களப் படையெடுப்பின் குறியீடாகக் கருதத்தக்கவர் ஜானக பெரேரா. அவரது கடந்த கால செயற்பாடுகள் அதனை உறுதிப்படுத்தி, நிரூபிப்பவை.

1995 - 96 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ். குடா நாட்டை இலங்கை இராணுவம் கைப்பற்றியபின்னர் அச்செழு - ஊரெழுப் பகுதியில் தலைமையகத்தைக் கொண்டு செயற்பட்ட 51 ஆவது படையணிக்கு (டிவிஷனுக்கு) பொதுக் கட்டளையிடும் அதிகாரியாக இவர் பணியாற்றினார். அப்போது தான் இவரது அதி காரத்தின் கீழ் இருந்த யாழ். குடாநாட்டுப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் கைதா கிப் பின்னர் காணாமற் போனார்கள். பின்னர் இவரது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைந்தி ருந்த பாரிய செம்மணி நிலப் பகுதியில் ஓரிரு இடங்க ளில் நடத்தப்பட்ட தோண்டுதல்களின் போது சுமார் இரண்டு டசின் மனித எலும்புக் கூடுகளும் மனித சடலங்களின் எச்சங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. பல நூற்றுக்கணக்கில் காணாமற் போனவர்கள் இந்த செம்மணி யில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று இன்றும் கருதப்படு கின்றது.

அதிஷ்டவசமாக ஜெனரல் ஜானக பெரேரா யாழ். குடா நாட்டிலிருந்து குறுகிய காலத்தின் பின் இடமாற்றம் செய்யப் பட்டமையை அடுத்து, ஆள்கள் கடத்திக், காணாமற் போதல் அங்கு உடனடியாக முடிவுக்கு வந்தது. அது இப்போது அங்கு மீண்டும் மோசமாகத் தலைதூக்கியிருக்கின்றமை வேறு விடயம்.

ஜெனரல் ஜானக பெரேராவின் அதிஷ்டமோ, என்னவோ அப்போதைய அந்த - மனித குலத்துக்கு எதிரான - கொடூ ரங்கள் பற்றிய விடயங்களில் சட்டச் சான்றுகளும், சாட் சிக ளும் இல்லாமல் போனதால் அவர் நீதியின் முன் இலகுவாகச் சிக்காமல் தப்பிப் பிழைக்க முடிந்தது.

பின்னர் மீண்டும், 2000 ஆம் ஆண்டில் ஆனையிறவுப் படைத்தளம் புலிகள் வசம் வீழ்ந்து, குடாநாட்டை அரசுப் படைகள் தக்கவைத்திருப்பது கேள்விக்குறியானபோது, மீண்டும் யாழ். குடாநாட்டின் படைத்தளபதியாகப் பொறுப் பேற்று 2000 மேயில் யாழ். சென்றார் ஜானக பெரேரா. அவர் அந்தப் பொறுப்பை ஏற்று சில தினங்களில், எந்தவித நியாய மான காரணங்களோ, விளக்கங்களோ வெளிப்படுத்தப் படாமல், யாழ்ப்பாணத்திலிருந்து ஈழத் தமிழரின் தேசியத் தைப் பிரதிபலிக்கும் வகையில் பிரசுரமாகும் 'உதயன்' நாளிதழ் அரசினால் 'சீல்' வைத்து மூடப்பட்டது. அந்த ஊடக அடக்குமுறைக்கு அப்போதைய அரசை சிபார்சு செய்து வழி நடத்தியவர் ஜெனரல் ஜானக பெரேராதான் என்பதும் ஊர றிந்த இரகசியம்.

அதற்கு முன்னர் சில காலம் அவர் மட்டக்களப்பு மாவட் டப் படைத் தளபதியாக இருந்தபோதும் அங்கும் அப்போது தமிழ் இளைஞர்கள் கடத்தி அல்லது கைது செய்யப்பட்டுக் காணாமற்போகும் சம்பவங்கள் தாராளமாகவே அரங்கேறின.

தமிழர் மீதான இராணுவக் கொடூர அழுத்தத்தின் குறியீ டான - சின்னமான - ஜெனரல் ஜானக பெரேராவை இந்தச் சமயத்தில் முன்னுக்குக் கொண்டு வருவதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி சிங்கள மக்களுக்கு பூடகமாக ஒரு தகவலை முன்வைக்க முயல்கின்றது போலும். ஆனாலும் அதுவே மறுபுறத்தில் தமிழர்களுக்கும் ஒரு முக்கிய செய்தியை உரைகின்றது என்பதைத் தமிழர்கள் மறந்து விடக்கூடாது.

தீவிர இராணுவ அராஜகத்தில் முனைப்புக் கொண்ட வரான கடும் போக்காளர் ஜெனரல் ஜானக பெரேரா ஐக்கிய தேசியக் கட்சியின் பாதுகாப்புப் பேச்சாளராகவும் நியமிக்கப்பட விருக்கின்றமை, ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை 'மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுகின்றது' என்பதையே கோடிகாட்டுகின்றது என்பது தெளிவு.

இனப்பிரச்சினைக்கு, விட்டுக்கொடுப்புடன் தமிழர்களுக்கு நியாயம் செய்வதே நீதியான நடைமுறை என்ற வாதத்தை சில காலம் வெளிப்படுத்தி வந்த ஐ.தே.க. அந்தக் கோஷம், பௌத்த - சிங்களப் பேரினவாதத்தில் மூழ்கிக் கிடக்கும் தென்னிலங்கையில் எடுபடாது என்பதைப் புரிந்து கொண்டு, தனது சமரச வேடத்தைக் கலைத்து, மீண்டும் பழையபடி தனது உண்மையான பேரினவாத முகத்தைக் காட்டத் தயாராகி விட்டது. அதற்கான கட்டியம் கூறலே ஜெனரல் ஜானக பெரேரா வின் அரசியல் அறிமுகமாகும்.

# சிறந்த கைத்தொழில் முயற்சியாளர் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 23

2008ஆம் ஆண்டிற்கான சிறந்த கைத்தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்துறை, கைத்தொழில் துறையிலுள்ள சுயதொழிலாளர்கள் என்ற ரீதியில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப் படவுள்ளன.

கிராமிய கைத்தொழில்கள் மற் றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச் சின் வழிப்படுத்தலின் கீழ் கைத் தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் நவம்பர் மாதம் 23ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதிவரை கொழும்பு சிறி மாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு நிலையத்தில் தேசிய கண் காட்சி மற்றும் வர்த்தகச்சந்தை நடை பெறவுள்ளன.

இக்கண்காட்சியில் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் ஜனாதிபதி விருதுக்குத் தகுதி பெறும் தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட வுள்ளனர்.

இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள், உணவு மற்றும் பானங்கள், பாதணி தோல் மற்றும் ஒத்த உற்பத்திகள், இலகு பொறியியல் மற்றும் பொறியியல் கைத்தொழில் கள், தும்பு மற்றும் நார் அடிப்படையி லான உற்பத்திகள், மர ம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்திகள், அச் சிடும் கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் அடிப்படையிலான உற்பத்திகள், கனிப் பொருள்கள் மற்றும் இரசாயன அடிப் படையிலான உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஷ்டிக் அடிப்படையிலான உற்பத்திகள், கட்டடம் மற்றும் கட் டடப் பொருள் அடிப்படையிலான உற் பத்திகள், தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்திகள், வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு முயற்சியா ளர் தெரிவு இடம்பெறும்.

போட்டிக்கான விண்ணப்பங்களை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகங்களுக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் ஓகஸ்ட் 18 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கு மாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட முயற்சியாளர்கள் சுண்டிக்குழி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள மாவட்டக் காரியாலயத்தில் மேலதிக விவரங்களைப் பார்வையிட லாம். (202)

# சவால்களுக்கு மத்தியிலும் உயிரோட்டமுள்ள அமைப்பாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

## அமைப்பின் தலைவர் குறிப்பிடுகின்றார்

அம்பாறை, ஜூன் 23

இலங்கையில் இன்று ஊடகத் துறையினருக்கு ஏற்பட்டுள்ள அச் சுறுத்தல்கள், சவால்களுக்கு மத்தியி லும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றி யம் உயிரோட்டமுள்ள அமைப்பா கக் காலூன்றிச் செயற்பட்டு வரு கின்றது.

இலங்கை தமிழ் ஊடகவியலா ளர் ஒன்றியத்தின் புதிய தலைவர் ஆர்.பாரதி மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

இலங்கை தமிழ் ஊடகவியலா ளர் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் ஒன்றியத்தின் பிரதித் தலைவர் ஏ.என்.எம்.சலீம் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு, வெள்ளவத்தை தர் மராம மாவத்தையிலுள்ள பெண்கள் ஆய்வு நிலைய மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

கொல்லப்பட்ட, மறைந்த ஊடக வியலாளர்களுக்கு இரு நிமிட மௌன அஞ்சலிசெலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் நடப்பு வருட புதிய நிர்வாகிகள் தெரிவு போட்டியின்றி ஏக மனதாக இடம்பெற்றது.

தலைவராக ஆர்.பாரதி, பிரதித் தலைவர்களாக ஏ.எல்.எம்.சலீம் உபதலை வர்கள் ஏ.நிக்சன், கென் யூட்சன், செய லாளர் ஆர்.சிவராஜா, உபசெயலா ளர்களாக ச.பா.நிர்மாணிசன், திருமதி ரேணுகா பிரபாகரன், பொருளாளராக சிறீகஜன் உப பொருளாளராக வாஷிங் டன்; ஆகியோர் தெரிவு செய்யப்பட் டனர்.

ஒன்றியத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளராக எஸ்.சரவணனும் மலையக இணைப்பாளராக இரா.செல் வராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவர் ஆர்.பாரதி தம்மைத் தலைவராகத் தெரிவு செய்தமைக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகை யில்; மேலும் குறிப்பிட்டதாவது:

குறிப்பாக, ஐந்து ஊடக அமைப் புக்கள் ஒன்றிணைந்து நமது ஊடக வியலாளர்களுக்காக குரல் கொடுத்து வருகின்றோம்.

எதிர்காலத்தில் எத்தகைய சவால் கள் வரினும் தமிழ் ஊடகவியலா ளர்களுக்காக மட்டுமன்றி ஊடக சமூ கத்திற்காக எம் குரல் ஒலித்துக் கொண் டிருக்கும் - என்றார். (202)




குருநகர், ஜூன் 23

ஊர்காவற்றுறை நாரந்தனை பேதுரு, பாவிலு ஆகிய இரு புனிதர் களின் திருவிழாத் திருப்பலி எதிர் வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு நடை பெறவுள்ளது.

நவநாள் ஆராதனைகள் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகியுள்ளது. (202-51)

* * *

குருநகர், ஜூன் 23

யாழ்ப்பாணம் சுண்டுக்குளி தூய திருமுழுக்கு யோவான் ஆலயத் திருவிழாத் திருப்பலி நாளை செவ் வாய்க்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பி.ஞானப் பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு நற்கருணைத் திருவிழா நடைபெறவுள்ளது. (202-51)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23

கொக்குவில் மாத்தனைக் கந்த சுவாமி கோயில் பெருந்திருவிழா எதிர் வரும் 28ஆம் திகதி கொடி யேற்றத் துடன் ஆரம்பமா கியது.

எதிர்வரும் 8ஆம் திகதி தேர்த் திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்ப்பாணம், திருநெல்வேலி ஸ்ரீ தலங்காவற் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவில் நாளை தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 23

கொடிகாமம் கச்சாய் வீதி தூய பேதுரு வானவர் ஆலயத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

திருவிழா பத்துத் தினங்கள் நடை பெறவுள்ளது. நற்கருணைப் பெரு விழா எதிர்வரும் 28ஆம் திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழாத் திருப்பலிப் பூசை மறுநாள் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். (202-131)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 10 | 24.06.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.இ 03.19 வரை |
| நட்சத்திரம் : | சதயம் |
| | பி.இ 12.25 வரை |
| சுபநேரம் : | 10.25 - 11.55 |
| ராகுகாலம் : | 02.55 - 04.25 |

# போதைப் பொருள் ஒழிப்பு வாரம்

கொழும்பு, ஜூன் 23

சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு போதைப் பொருள் ஒழிப்பு வாரமொன்று பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. அபாயகரமான ஔட தங்களைக் கட்டுப்படுத்தும் தேசிய சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அதன் தலை வர் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

போதைப் பொருள் ஒழிப்பு வாரம் பிரகடனம் குறித்து அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு கடந்த வெள்ளிக் கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (202)

# ஜயலத்தின் உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தும் அவரின் பாதுகாப்பை பிரதமர் குறைத்தாராம்!

## விசாரணை நடத்த நாடாளுமன்றில் [illegible] கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

தமக்கு உயிர் ஆபத்து இருக்கின் றது எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவி னர் (சி.ஐ.டியினர்) தெரிவித்தும்கூட தமது பாதுகாப்பைக் குறைப்பதற்குப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நடவடிக்கை எடுத்தார் என்று ஐ.தே. கவின் எம்பியான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா குற்றம் சுமத்தியுள்ளார். இதற்காகப் பிரதமரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன் றில் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பாக அவர் நாடாளு மன்றில் சிறப்புரிமை மீறல் பிரச்சினை ஒன்றை எழுப்பி உரையாற்றினார். அப்போதே மேற்கண்டவாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எனக்கு உயிர் ஆபத்து இருக்கின் றது என்று நான் பல தடவைகள் இந் தச் சபையில் கூறியிருந்தேன். குற்றப் புலனாய்வுப் [illegible]லிஸாரும் இதை உறுதிப்படுத்தினர்.

அப்படியிருந்தும் கூட எனது பாது காப்பைக் குறைக்கப் பிரதமர் நட வடிக்கை எடுத்து, எனக்கிருந்த உயிர் ஆபத்தை அதிகரிக்கச் செய்தார்.

இந்த நிலையில்தான் நான் பாது காப்புக் கோரி நீதிமன்றம் சென்றேன். அச்சுறுத்தல் இருக்கின்றமை நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது என்று தெரிந்தும்கூட எனது பாது காப்பைக் குறைக்கப் பிரதமர் நட வடிக்கை எடுத்தமைக்காகப் பிரதமரி டம் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். - என்றார்.

இது தொடர்பாக உரிய நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொ[illegible] பண்டார கூறினார். [illegible]சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகக் கருமங்களை ஆற்றும் வேளைகளில் அதிக தற்துணிவு அதிகாரம் நீதிபதிகளுக்கு உண்டு

## அதனை அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்கிறார் சுவர்ணராஜ்

யாழ்ப்பாணம், ஜூன்23

திறந்த நீதிமன்றத்தில் நீதிபதிகளுக்கு தற்துணிவு அதிகாரம் இருப்பதைவிட நிர்வாகக் கருமங்களை ஆற்றும்போது அவர்களுக்கு அதிக தற்துணிவு அதிகாரத்தை பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. இங்கு பணிபுரியும் நீதிபதிகளுக்கு குறிப்பாக மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு முடிவுகளை எடுக்கக் கூடிய தற்துணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ். சட்டத்தரணிகள் சங்கம் அளித்த பிரியாவிடை விருந்து நிகழ்வுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விழாவில் தற்போது நியமனம் பெற்றிருக்கும் மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன், மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் மற்றும் குடாநாட்டின் சட்டத்தரணிகள் பலர் சமுகமாகி இருந்தனர்.

யாழ்.சட்டத்தரணிகள் சங்க உபதலைவர் சட்டத்தரணி எஸ்.சிவநேசன் வைபவத்திற்கு தலைமை வகித்தார். கூட்டத்தில் நீதிபதிகளும் முன்னாள் நீதிபதிகள் கே.பி. எஸ்.வரதராஜா, எம்.திருநாவுக்கரசு ஆகியோரும் சட்டத்தரணிகள் தவபாலன், குமாரசாமி, கேசவன், வேலாயுதம், தம்பிமுத்து ஆகியோரும் அரச சட்டத்தரணி ஏ.ஏ.ஆனந்தராஜா அவர்களும் பாராட்டிப் பேசினர்.

மேல் நீதிமன்ற நீதிபதி பொ.சுவர்ணராஜ் உரையாற்றுகையில் சட்டத் தரணிகள் ஐக்கியப்பட்டு நீதிபதிகளுடன் சேர்ந்து ஆர்வத்துடன் அளித்த இவ்விருந்து உபசாரம் மகிழ்ச்சியைத் தருகிறது என்றார்.

நீதிபதிகள் இருவிதங்களில் பணியாற்றவேண்டி இருக்கிறது. அவர்கள் திறந்த நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான பணிகளை ஆற்றுவதோடு மாத்திரமல்ல நீதிமன்றங்களின் நிர்வாகப் பணிகளையும் ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறார்கள். திறந்த நீதிமன்றத்தில் அவர்களுக்கு தற்துணிவு அதிகாரம் இருப்பதைவிட நிர்வாகக்கருமங்களை ஆற்றும்போது அவர்களுக்கு அதிக தற்துணிவு அதிகாரத்தை எடுக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. நீதிமன்ற கட்டடத் தொகுதியைப் பொறுத்தளவில் அங்கு கடமையாற்றும் நீதிபதிகளுக்கு குறிப்பாக மேல்நீதிமன்ற நீதிபதிகளுக்கு முடிவுகளை எடுக்கக்கூடிய தற்துணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.-

இன்று பேசியவர்களில் சிலர் குறிப்பட்டது போது என்னுடைய காலப்பகுதியில் பலமானகாற்று வீசியபோதிலும் கூட தற்பொழுது மெதுவான தென்றலைப் போன்று இணக்கப்பாடு ஏற்பட்டு இவ் விருந்து உபசாரம் யாவருடைய ஒத்து ழைப்புடனும் நடைபெறுவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.-

இம்மண்ணுடன் எனக்குள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதொன்றல்ல. இம்மண்ணின் மக்களது நலனுக்காக சேவை செய்யவேண்டும் என்பதே எனது ஒரே நோக்கமாக இருந்தது. அதுமாத்திரமல்ல இங்கு பணிபுரியும் சகல சட்டத்தரணிகளின் நலன்களுக்கும் சௌகரியங்களுக்கும் குந்தகம் ஏற்படாதவகையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதும் எனது நோக்கமாக இருந்தது. முன்னாள் மாவட்ட நீதிபதி உட்பட ஏனைய நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் இதுவரை எனக்கு வழங்கிய ஒத்துழைப்பிற்காக என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார் அவர்.

நிகழ்வுக்கு தலைமை வகித்த சட்டத்தரணி எஸ்.சிவநேசன் உரையாற்றுகையில் கூறியதாவது: மேல்நீதிமன்ற நீதிபதி சுவர்ணராஜ் திறந்த நீதிமன்றத்தில் அமரும் போதே சட்டத்தரணிகளைப் பார்த்து புன்சிரிப்புடன் அமருகின்ற வழக்கம் எங்களுக்கு ஒரு புதுத்தென்பை அளிக்கக்கூடியதாக இருந்தது என்றும் எப்போதும் அமைதியாக இருந்து வழக்குகளை நீதியுடனும் அதே வேளை இரக்கத்துடனும் தீர்க்கின்றவராக இருந்தார் என்று குறிப்பிட்டார். தற்போதைய மேல்நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா பேசுகையில் சட்டக்கல்லூரியில் என்னுடன் ஒன்றாகப் படித்தவரான மாற்றலாகிச் செல்லும் மேல்நீதிமன்ற நீதிபதி நீதியும் இரக்க சிந்தையும் ஆன்மீக மனமும் கொண்டவராக நடத்திச் சென்ற மேல்நீதிமன்றத்தை தொடர்ந்தும் முன்னேற்றமான பாதையில் எடுத்துச் சென்று சிறந்த ஒரு பணியினை செய்வேன் என உறுதிகூறுகின்றேன்- என்றார்.

யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் உரையாற்றுகையில்,குடியியல் மேல் நீதிமன்றம் இயங்கத் தொடங்கி இருப்பதால் மேல் நீதிமன்ற நீதிபதி பொ. சுவர்ணராஜ் அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு கடமையாற்ற வருவார் எனக் கூறினார்.

புதிதாக நியமனம் பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் ஆகியோரை வரவேற்கின்ற நிகழ்ச்சியாகவும் இது அமைந்திருந்தது. நிகழ்வில் உரையாற்றியவர்கள் அவர்களையும் வாழ்த்தி உரையாற்றினார்கள். (1)



மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜுக்கு யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்தினர் பிரிவுபசார விழாவை கடந்த 21ஆம் திகதி மேல் நீதிமன்றில் நடத்தினர்.

இந்நிகழ்வில் சங்கத்தின் செயலாளர் சட்டத்தரணி கே.கேசவன், சுவர்ணராஜுக்கும் சட்டத்தரணி எஸ்.தவபாலன் இ.த.விக்னராஜாவுக்கும் மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும் சட்டத்தரணிகளுடன் நீதிபதிகள் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# அறிவுக்கு மட்டுமன்றி வாழ்விற்கும் கல்வியைப் பயன்படுத்த வேண்டும்

## மாணவர்களுக்கு அருட்தந்தை ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 23

கல்வியை நாம் அறிவுக்கு மட்டும் பயன்படுத்தாமல் எமது வாழ்விற்கும் பயன்படுத்த வேண்டும். அதன் மூலம் சிறந்ததோர் எதிர்காலத்தை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வாறு மாணவர்களுக்கு ஆலோசனை தெரிவித்தார் அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு. போல் நட்சத்திரம் அடிகளார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் 135 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

ஒரு பிரதேசத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர் என கல்விச் சமூகம் சார்ந்த சகலரும் அர்ப்பணித்து வாழவேண்டும். அதன் மூலம் கடவுள் பக்தியுள்ள பல நல்ல சமூகங்களை உருவாக்க முடியும். இது நல்லதொரு சமுதாயத்தை கட்டியெழுப்பும்.

இக்கல்லூரி வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்தது. பல கல்விமான்களை ஈன்றெடுத்த பெருமை இந்தக் கல்லூரியைச் சாரும்.

இக்கல்லூரி பல போட்டிகளில் வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என சகல மட்டங்களிலும் சாதனை படைத்தமையும் பாராட்டுக்குரியது- என்றார்.

# வவுனியா செயலகக் கிளை வலைப்பின்னலுடன் இணைகிறது

வவுனியா, ஜூன் 23

வவுனியா செயலகத்தில் இயங்கும் இலங்கை வங்கிக்கிளை வலைப்பின்னலுடன் இணைக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ அருமைநாயகத்தின் ஆசியுடன் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் எஸ். சண்முகம் கலந்து கொள்வார். (1)

# நலிவுற்ற குடும்பங்களுக்கான ஜூன்மாத நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன் 23

உலக உணவுத் திட்டத்தின் நலிவுற்ற குடும்பங்களுக்கான உணவு வழங்கலின் கீழ் ஜூன் மாத உணவு விநியோக வழங்கற்கட்டளைகள் இன்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தினால் சகல ப. நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகிக்கப்படவுள்ளன.

எனவே சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் இன்று வழங்கற் கட்டளைகளைப் பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொருள்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

ஜூன் மாத விநியோகத்தை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முதல் ஆரம்பிக்குமாறும்-

இந்நிவாரண விநியோகம் சீரான முறையில் உரிய காலத்தினுள் மேற்கொள்ளப்படுவதை பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

நலிந்த பிரிவினருக்கான உலக உணவுத்திட்ட ஜூன் மாத நிவாரணப் பொருள்களை எதிர்வரும் 27 ஆம் திகதியின் பின் காலம் தாழ்த்தாது உரிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுமாறு பயனாளிகளை [illegible] அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202)

# வைத்திய கலாநிதி நவமலரின் நினைவு நிகழ்வுகள் நாளை

வலி.வடக்கு, ஜூன் 23

அமரர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரெட்ணம் அவர்களின் 45 ஆம் நாள் நினைவு நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மண்டபத்தில் அளவெட்டிப்பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி க.இராதேயன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஞாபகார்த்த உரையை உலக சுகாதார நிறுவன ஆலோசகரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட சமுதாயத்துறை பேராசிரியருமான வைத்தியகலாநிதி என். சிவராஜாவும் அஞ்சலி உரைகளை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், உடுவில் பிரதேச செயலாளர் திருமதி ச. மஞ்சுளாதேவி-

தெல்லிப்பழை மாவட்டவைத்திய அதிகாரி செல்வி எஸ். சிவராணி, வைத்தியகலாநிதி எஸ்.யோகேஸ்வரன், வலி.தெற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், பண்டிதர் க. நாகலிங்கம், வலி வடக்கு பிரதேசசபை முன்னாள் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன், குடும்பநல அலுவலர்களின் மேற்பார்வையாளர் திருமதி கெ.தெய்வேந்திரம் ஆகி யோரும் நிகழ்த்துவர். (202-86)

# ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

'அனைவருக்கும் ஆங்கிலக்கல்வி' என்னும் செயற்றிட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள சகல ஆசிரிய நிலையங்களிலும் எதிர்வரும் ஜூலை மாதம் ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

வாரத்திற்கு 10 மணித்தியாலங்கள் கொண்டதாக இவ்வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்பும் தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையை விட்டு விலகியவர்களும் ஆங்கிலம் கற்க விரும்பும் ஏனையவர்களும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'ஆசிரியநிலையம்,வேலணை' என்ற முகவரிக்கும் நெடுந்தீவைச் சேர்ந்தவர்கள் நெடுந்தீவுக் கோட்ட அலுவலகத்திற்கும் விண்ணப்பிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார். (202)

# மல்லாகம் சதாசகாய அன்னை ஆலயம் ஆயரால் அபிஷேகம் செய்யப்பட்டது

வலி.வடக்கு, ஜூன் 23

மல்லாகம் புனித சதாசகாய அன்னை தேவாலயம் கடந்த சனிக்கிழமை யாழ். மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் அபிஷேகம் செய்யப்பட்டது.

மல்லாகம் சந்திக்குச் சமீபமாக கடந்த 5 வருடங்களாக புனித சதாசகாய அன்னை தேவாலயம் சிறிய கட்டடத்தில் இயங்கி வந்தது.

[illegible] புனித சதாசகாய அன்னை பங்கு மக்களினால் புனித தேவாலயம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு கட்டட வேலை முழுமை பெறாத போதிலும் வழிபாட்டிற்கு ஏற்றவகையில் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் சனிக்கிழமை பேராயரினால் ஆசீர்வதிக்கப்பட்டதுடன் அன்னையின் கொடியேற்றமும் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளில் பல நூற்றுக்கணக்கான மக்கள் மற்றும் அருட்தந்தையர், அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (202-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கலடியில் ஈ.பி.டி.பி. கடத்தியதாகக் கூறப்படும் வர்த்தகர் காணாமற்போயுள்ளாரென முறைப்பாடு

மட்டக்களப்பு, ஜூன் 23

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிப் பிரதேசத்தில் ஈ.பி.டி.பியினரால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வர்த்தகர் ஒருவர் காணாமற்போயுள்ளார் என்று பொலிஸார் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முறையிடப்பட்டிருக்கிறது.

இரண்டு குழந்தைகளின் தந்தையான தேவதாஸ் சுரேஸ்குமார் என்பவரே காணாமல் போனவராவார்.

கடந்த வியாழக்கிழமை மாலை தனது தாயாரின் வீட்டுக்குச் செல்கின்றார் எனக் கூறி வீட்டில் இருந்து சென்ற தனது கணவரை ஈ.பி.டி.பியினரே வான் ஒன்றில் கடத்திச் சென்றனர் என அவரின் மனைவி பி.பி.ஸிக்குத் தெரிவித்திருக்கிறார். கணவரை ஈ.பி.டி.பியினர் துப்பாக்கிப் பிடியால் தாக்கி பலவந்தமாக வானில் ஏற்றிச் சென்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி. மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுத் தொடர்பாக ஈ.பி.டி.பியின் சார்பில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் மட்டக்களப்பு இணைப்பாளருமான போடியார் எனப்படும் அருமைலிங்கம் தெரிவித்திருப்பவை வருமாறு:-

வாழைச்சேனைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் (ரி.எம்.வி.பி) உறுப்பினர்களால் ஈ.பி.டி.பி. உறுப்பினர் காளியப்பன் குணசீலன் கடந்த வியாழக்கிழமை கடத்தப்பட்டிருந்தார்.

இவரை ரி.எம்.வி.பி அமைப்பின் வாழைச்சேனைப் பொறுப்பாளர் அஜித் தலைமையில் சென்றவர்களே கடத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் காலை முதலமைச்சர் பிள்ளையானுடன் தொடர்புகொண்டு முறையிட முயற்சி எடுத்தேன். பிள்ளையானின் தொடர்பு கிடைக்கவில்லை- அவருக்கு உதவியாகச் செயற்படுகின்ற பிரதீப் மாஸ்டருடன் தொடர்புகொண்டு எமது உறுப்பினரை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டேன்.

அதற்குப் பதிலளித்த ரி.எம்.வி.பி. அமைப்பின் பிரதீப் மாஸ்டர், தங்களுடைய ஆதரவாளர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார் என்றும் அவரை முதலில் விடுதலை செய்யும்படியும் பின்னர் ஈ.பி.டி.பி. உறுப்பினரின் விடுதலை பற்றிப் பேசலாம் என்றார்.

உண்மையில் நடந்தது என்னவென்றால், ஈ.பி.டி.பியின் செங்கலடிப் பொறுப்பாளர் வாகனத்தில் சென்றவேளை மூவர் அந்த வாகனத்தை நோக்கி கல்வீச்சு நடத்தினர்.

இதனையடுத்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் அவர்கள் மூவரையும் பிடித்துவந்தனர்.

இந்த மூவரில் கடத்தப்பட்டார் என்று கூறப்படும் தேவதாஸ் சுரேஸ்குமார் என்பவரும் ஒருவர். இம்மூவரையும் நாங்கள் விடுதலை செய்துவிட்டோம் - என்றார்.

ஈ.பி.டி.பியின் பெயருக்கு களங்கத்தை உண்டு பண்ணவேண்டும் என்பதற்காக ரி.எம்.வி.பியினால் திட்டமிட்டு வெளியிடப்பட்ட ஒரு பொய்யான தகவல்தான் இது - என்றார்.

ஈ.பி.டி.பியினர் ரி.எம்.பி.வி. மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக் குறித்த அந்த அமைப்பின் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்தவை வருமாறு:-

கடந்த இரு தினங்களுக்கு முன்பு வாழைச்சேனைப் பகுதியில் இளைஞர் ஒருவர் அவரின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு முன்பாக வைத்து ஈ.பி.டி.பியினரால் கடத்தப்பட்டிருக்கிறார். இதுவரையும் அந்த இளைஞன் விடுவிக்கப்படவில்லை - என்றார். (சி)

## திருமணப் பொன்விழா வாழ்த்து



இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைந்து 50 ஆண்டு நிறைந்து பொன் விழா காணும் எங்கள் அன்பு பெற்றோர்

திரு.திருமதி

**பிலிப் தம்பதியினருக்கு**

எங்கள் உளம் நிறைந்த வாழ்த்துக்களையும் இறைவனுக்கு மனமார்ந்த நன்றிகளையும் கூறி நிற்கின்றோம்.

பாஸையூர்.

என்றும் உங்கள் இனிய
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## தமிழக மீனவர் மீது துப்பாக்கிச் சூடு

# இலங்கைக் கடற்படையைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் வீதி மறியல் - பதற்றம்

ராமேஸ்வரம், ஜூன் 23

நடுக்கடலில் தமிழக மீனவர் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் ராமேஸ்வரம் மீனவர்கள் கொதிப்படைந்துள்ளனர். இலங்கைக் கடற்படையின் அத்துமீறலைக் கண்டித்து மீனவர்கள் நேற்று வீதிமறியலில் ஈடுபட்டதால் இங்கு பதற்றம் நிலவுகிறது.

இந்தியக் கடற்பகுதிக்குள் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை அடிக்கடி துப்பாக்கிச் சூடு நடத்திவருகிறது. மீனவர்களைத் தாக்கி, அவர்களின் உடைமைகளைப் பறித்துச் செல்வதுடன் கைது நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றது.

கச்சதீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரு மீனவர்கள் படுகாயமடைந்தனர். இலங்கைக் கடற்படையின் இந்த அத்துமீறலைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கடல் தொழிலாளர் சங்க மாநிலச் செயலாளர் சேதுமுருகானந்தம் தலைமையில் ராமேஸ்வரத்தில் நேற்று மாலை வீதிமறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் ராமேஸ்வரம் மீனவர்கள் இடையே பெரும் கொந்தளிப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (சி)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### முத்துவேலு சண்முகநாதன் (தவம்) J.P.



மல்லாகம் நீதி நிர்வாக மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக நீதியமைச்சரால் நியமிக்கப்பட்டு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் 20.06.2008 அன்று சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றார். இவர் வலி.மேற்கு சங்கானை250/10 மத்தியஸ்தர் குழுவில் மத்தியஸ்தராகவும், முன்னாள் உடையார், அராலி வட்டுக்கோட்டை, முன்னாள் தலைவர், கிராம அபி விருத்திச் சங்கம், வட்டுக்கோட்டை மற்றும் எமது சங்கப் போசகரும். பிரபல சமூக சேவையாளருமான திரு முத்துவேலு சண்முகநாதன் (தவம்) அவர்கள் இன்னும் பல் லாண்டு காலம் வாழ்ந்து எமது மக்களுக்கு மேலும் பல சேவைகளை செய்ய வேண்டும் என பாராட்டி வாழ்த் துகிறோம்.

*கனகரத்தினம் வீதி,*
*வட்டுக்கோட்டை* (சி/553461)

வட்டு .இளைஞர் அபிவிருத்திக் கழக சனசமூகநிலையம்

## கண்ணீர் அஞ்சலி

கலாமன்ற சனசமூக நிலையத்தின் முன்னாள் விளையாட்டுத்துறைத் தலைவரும் ஆலோசகருமாகிய

**திரு. T.K.வில்வராஜா (கனடா)**

(இளைப்பாறிய ஆசிரியர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் உற்றோம்.

அன்னாரின் மறைவு விளையாட்டுலகிற்கு பேரிழப்பாகும். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

கலாமன்ற ச.ச.நிலையம்

## 5ஆம் மாத நினைவலைகளுடன் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

மனம்மகிழ
23
★
06
★
1959



மனம்துடிக்க
20
★
01
★
2008

23.06.2008

**அமரர் அந்தோனி பர்னாந்து செபமாலை முத்து**

பப்பா, வாழ்த்துக்கள் கூற இன்று எம்முடன் நீங்கள் இல்லை,
ஆயிரம் உறவுகள் இருப்பினும் உங்களைப் போல் வருமா பப்பா
இதயத்தில் இறையாகி உள்ளத்தில் உயர்வாகி வாழுவதற்கு வழிகாட்டியாகி
தெய்வமாகிய பப்பா, எத்தனை நாள்கள் கடந்தாலும் உங்கள்
பிரிவுத்துயர் ஆறாது

*இல: 27/23, ஈச்சமோட்டை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

என்றும் உங்கள் நினைவுகளுடன்;
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்

## மரண அறிவித்தல்

### அம்பலம் சிதம்பரப்பிள்ளை

[உரிமையாளர், கிருஷ்ணா இரும்புத் தொழிற்சாலை, சங்கானை]



சங்கானை காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டிருந்த அம்பலம் சிதம்பரப்பிள்ளை 19.06.2008 வியாழக்கிழமை சங்கானையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தவமணியின் அன்புக் கணவரும், [illegible]க்கியம், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கனகராஜாவின் மைத்துனரும், காலஞ்சென்ற நவமலர் மற்றும் சற்குணராசா (France), கமலவதானா (France), குலோந்திரராஜா (London), ஜெயசாந்தினி (ராசாத்தி ), கவிதா (Germany) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தசாமி, சாந்தி (France), ஜெயந்தன் (France), கலைவாணி (London), சண்முகலிங்கம் (Saudi), கமலநாதன் (Germany) ஆகியோரின் அன்பு மாமனும், மதுரா, ராகுலன், சாரங்கன், சாருசா, கார்த்திகா, கீர்த்திகா, பிரியங்கா (France), பார்கவி, கயந்தவி (London), அபிராமி, கீர்த்திகன், கிஷாந் (Germany) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2008) திங்கட்கிழமை மு.ப 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*காளிகோயிலடி,*
*சங்கானை.*

தகவல்:
சற்குணராசா (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பைன்ஸில் 94 மைல் வேகத்தில் சூறாவளி!
## வெள்ளப்பெருக்கு; மண்சரிவு; பயணிகள் கப்பல் மூழ்கியது!!

மணிலா, ஜூன்.23

பலத்த மழையோடு கூடிய 'பெங்ஷென்' என்னும் சூறாவளி நேற்று ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது நாளாக பிலிப்பைன்ஸ் மூர்க்கமாகத் தாக்கியது. இதன் அனர்த்தங்களுக்கு 155 பேர் வரை உயிரிழந்துள்ளனர். அதேவேளை, 740 இற்கு மேற்பட்டவர்களுடன் புறப்பட்ட பயணிகள் கப்பலொன்று கடலில் புயலில் சிக்குண்டுள்ளது எனவும் அதனுடான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

பயணிகள் கப்பலின் சொந்தக்காரர் சுல்பிசியோ லைன்ஸ் இது தொடர்பாக துறைமுகக் கப்டன் நெஸ்டோர் பொன்டிரஸுக்குத் தகவல் தெரிவிக்கையில், சனிக்கிழமை மதியம் படகின் இயந்திரம் செயலற்றுவிட்டது. அத்துடன் ரேடியோ தொடர்பும் துண்டிக்கப்பட்டு விட்டது. பயணிகளின் கதி என்னவென்றும் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

புயல் அனர்த்தங்களுக்குப் பலியானோரில் 59 பேர் மத்திய மாகாணமான இலோய்லோவில் வெள்ளத்தில் மூழ்கி மரணித்துள்ளனர் மற்றும் 40 பேர் காணாமற் போயுள்ளனர் என ஆளுநர் நீல் டுபாஸ் தெரிவித்துள்ளார். எல்லா நகரங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. எங்கும் கடலைப் போன்றிருக்கிறது. இம் மாகாணத்தில் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய பிலிப்பைன்ஸை சனிக்கிழமை பலத்த மழையோடு கூடிய சூறாவளி மூர்க்கமாக நான்கு மணித்தியாலங்கள் வரைத் தாக்கியது. எங்கும் வெள்ளப்பெருக்கெடுத்தது. ஆங்காங்கு மண்சரிவுகள் ஏற்பட்டன. மின் விநியோகம் தடைப்பட்டது. அநேக வீடுகளின் கூரைகள் பறந்துவிட்டன. விவசாய நிலங்களும் நீரில் மூழ்கிவிட்டன என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு மணித்தியாலத்துக்கு 74 மைல் வேகத்தில் சீறி அடித்த சூறாவளியின் வேகம் பின்னர் துரிதமடைந்து 94 மைல் எட்டியது. நேற்று ஞாயிற்றுக்கிழமை சூறாவளி திசை மாறியது. வட மேற்காகத் திரும்பிய சூறாவளி கடும் மழையோடு தலை நகரான மணிலாவைத் தாக்கியது.

கோட்டபேட்டோ நகரில் சனிக்கிழமை 50 வயதான ஒருவரும் அவரது 10 வயதான பேரனும் மண் சரிவுக்குள் சிக்கி மரணித்துள்ளனர் என நகர பிதா முஸ்லிமின் சீமா தெரிவித்துள்ளார். பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா மெக பெகல் அரோயோ சனிக்கிழமை மாலை தாம் அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் மீட்டுப் பணிகள், நிவாரணப் பணிகள் ஆகியவற்றை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு மற்றும் உள்ளூர் அரச திணைக்களங்கள் ஆகியவற்றிற்கு உத்தரவிட்டுள்ளார்.

# நல்லூரில் நேற்று மாலை மினிபஸ் விபத்து
## அறுவர் காயம்: மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம் ஜூன் 23

நல்லூர் வைமன் வீதியும் அரசடி வீதியும் சந்திக்குமிடத்தில் நேற்று மாலை 4.15 மணியளவில் இடம்பெற்ற மினிபஸ் -மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவரும் அவரது மனைவியும் காயமடைந்ததோடு மினிபஸ்ஸின் சாரதியும் பயணிகள் மூவரும் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

அச்சுவேலி நோக்கி சென்று கொண்டிருந்த மினிபஸ் எதிரே வந்த லொறியுடன் மோதுபடுவதைத் தவிர்க்கும் பொருட்டு திரும்பிய போது, வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்து நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மினிபஸ் மோட்டார் சைக்கிளை மோதி மின்கம்பத்துடனும் மோதுண்டது அருகிலிருந்த வீட்டு மதில் ஒரு பகுதியும் உடைந்த வீழ்ந்தது.

இச்சம்பவத்தில் காயமுற்றவர்களில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பூநாறி வீதி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ரி. குருநாதன் (வயது48) அவரது மனைவியான கே. தனபதி (வயது40) ஆகியோரும் மினிபஸ்ஸின் மிதிபலகையில் பயணம் செய்த நீர் வேலி கிழக்கைச் சேர்ந்த எஸ். சுதர்சன் (வயது 23) ஆகியவருமே காயமடைந்தவர்கள் ஆவார்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். குருநாதன் தீவிர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-38-25-78)

# குடாக்கடலில் மீன் பிடிக்க அனுமதி
## பட்டிவலை தொழிலுக்கு தொடர்ந்து தடை

குருநகர் ஜூன் 23

குடாக்கடல் நீரேரியில் மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு நேற்று முன்தினம் 21ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் படையினரால் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டது. இத னைத் தொடர்ந்து குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் அன்றைய தினம் காலை 7.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை இக்கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.

குருநகர் இறங்குதுறையில் இருந்து சுமார் 2கிலோ மீற்றர் வரையுள்ள பரவைக் கடற்பகுதியிலேயே மீன்பிடிக்க இவர்கள் அனுமதிக்கப்பட்டனர் எனவும் பட்டி வலை விதைத்து மீன்பிடிப்பது தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளதாக படையினரால் தெரிவிக்கப்பட்டதாகவும் இம் மீனவாகள் தெரிவித்தனர். மடிவலை, தங்கூசி வலை ஆகிய மீன்பிடித தொழிலகளைச் செய்யவே அனுமதி வழங்கப்பட்டதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவித்தனர். யாழ்குடாக்கடலில் குறுகிய எல்லைப் பகுதியிலேயே மீன் பிடிக்க அனுமதிக்கப்படுவதனால் இங்கு பிடிக்கப்படும் கடல் உணவுகள் குறைந்தன வாகவும் சிறியனவாகவும் உள்ளதால் கடல் உணவுகளின் விலைகள் மிகவும் உயர்வா கவே சந்தைகளில் காணப்பட்டன. திரளி, ஒட்டி, இறால், நண்டு, சிறையாமீன் வகைகளே சந்தையில் விற்பனைக்கிருந்தன.

சின்னக்கடைப் பொதுச் சந்தையில் ஒரு கிலோ மீன் ரூபா 600 ஆகவும், ஒரு கிலோ இறால் ரூபா400 ஆகவும் விற்பனை செய்யப் பட்டன. வடமராட்சி மற்றும் தீவகத்தில் இருந்து மீன் வியாபாரி களினால் இச் சந்தைக்கு எடுத்துவரப்பட்ட சூடை மீன் கிலோ ரூபா 160 ஆக விற்பனை செய்யப் பட்டது. (அ-51)

## இலங்கை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் போர் தீவிரமாக நடைபெற்று வரும் வேளையில் பாதுகாப்புத்துறை ஆலோசகர் மற்றும் செயலாளர் ஆகியோர் இக்குழுவில் சென்றிருக்கின்றனமை இராணுவ உதவிகள் அளிப்பது சம்பந்தமாகப் பேசுவதற்காகவே என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஏற்கனவே நோர்வே சமரசத் தூதுவரை சிங்கள அரசு தன்னிச்சையாகத் திருப்பி அனுப்பியமையைக் கண்டிக்கும் வகையில் ஐரோப்பிய நாடுகள் உட்படப் பல்வேறு நாடுகள் நிதி உதவி, ஆயுத உதவி ஆகியவற்றை இலங்கைக்கு வழங்குவதை நிறுத்தியுள்ளன.

இலங்கையில் நடைபெறும் அப்பட்டமான மனித உரிமை மீறல்களை உலக நாடுகள் பலவும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

இந்நிலையில், இந்திய அரசு இலங்கைக்கு அண்மையில் பெருமளவு நிதியுதவி அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து இப்போது இராணுவ ரீதியான உதவிகள் அளிப்பதற்கு முன்வந்திருக்கிறது என்பதனை இக்குழுவினரின் கொழும்புப் பயணம் உறுதிசெய்துள்ளது.

தமிழர்களைக் கொன்று குவிக்க சிங்கள அரசுக்கு இந்திய அரசு செய்துவரும் உதவிகளைத் தடுத்து நிறுத்திவிடத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஓரணியாகத் திரள வேண்டும் என வேண்டிக்கொள்கிறேன். - என்று உள்ளது. (சி)

## ஐ.தே.க.தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டு மக்களைத் தற்போதைய அரசின் அழிவுப் பாதையில் இருந்து மீட்பதாக இருந்தால் ஐ.தே.கட்சி தேர்தல்களில் வெற்றி பெற்று அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைவராக இருந்து எடுக்கும் தீர்மானம் எல்லாம் ஏகாதிபத்திய தீர்மானமாகவேயுள்ளன. அவர் மக்களில் இருந்து மிகவும் தள்ளியிருக்கின்றார். அப்படியான ஒருவரால் இந்தக் கட்சியைக் கட்டியெழுப்ப முடியாது.

அவர் நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகவேண்டும்.

இந்த நாட்டுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்த டி.எஸ். சேனாநாயக்கவின் பேரன் ருக்மன் சேனாநாயக்கவே கட்சியின் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்.

ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்குள் கட்சியைக் கட்டியெழுப்பி அனைத்துக் தேர்தல்களையும் வெல்லும் வகையில் சஜித் பிரேமதாஸ மற்றும் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோருக்கு கட்சியில் முக்கிய பதவிகள் வழங்கப்படல் வேண்டும்.

இந்த யோசனைகள் உள்ளிட்ட பல அம்சங்கள் அடங்கிய தீர்வுத்திட்டம் ஒன்று கட்சியின் செயற்குழுவிற்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையோடு இந்த யோசனையை நிறைவேற்றி ருக்மன் சேனாநாயக்கவைத் தலைவராக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

அதற்கு முன்பு கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ரணில் விலகவேண்டும் என்று நாம் அவரிடம் கௌரவமாக வேண்டிக் கொள்கிறோம். - என்றனர். (அ-உ)

## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நேற்று முற்பகல் 9 மணியளவில் படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்தியதாகக் கூறப்படும் கிளைமோர்த் தாக்குதலில் சிவிலியன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

பளை செல்வபுரத்தைச் சேர்ந்தவரும் மல்லாவியில் வசிப்பவருமான பரமசிவம் சிறீகரன் என்பவரே கொல்லப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (சி)

## ஆசிரியர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லீவுப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

அதனை முறியடிக்கும் நோக்கில் அந்த இரண்டு நாள்களுக்கும் அரச பாடசாலைகளுக்கு அரசு விடுமுறை அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க ஆசிரியர் சங்கங்கள் அரசுக்குக் காலக்கெடு விதித்தி ருந்தன.

இந்தக் காலக் கெடு முடியும் முன்பதாக - அதாவது 30 ஆம் திகதிக்கு முன்பே - இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதிக்கும் ஆசிரியர் சங்கங்களுக்குமிடையில் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

## அலம்பில் பகுதியில் எறிகணை வீச்சு

கொழும்பு, ஜூன் 23

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, அலம்பில் பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சுமார் 11 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரச கட்டுப்பாட்டில் உள்ள மண்கிண்டி மலைப் பகுதியில் இருந்தே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்று வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதலின்போது அலம்பில் உடுப்புக்குளத்தில் உள்ள மக்களின் நான்கு வீடுகள் சேதமடைந்தன என்று கூறப்பட்டது. (சி)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்துள்ளனர். படையினரின் 3 சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு கடுமையாக சிதைந்துள்ளன. மூன்று ரி56-6 ரக துப்பாக்கிகள், மூன்று ரவைக்கூடுதாங்கி அணிகள், எட்டு ரவைக்கூடுகள் மற்றும் ரவைகள், கைக்குண்டுகள் போன்றன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன - என்று கூறினார்.

இத்தாக்குதல் தொடர்பில் படைத்தரப்புத் தகவல் எதுவும் இச்செய்தி எழுதப்படும்வரை வெளிவரவில்லை. (சி)

## மாகாணசபைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களம் இறக்கும் என்று தெரிவிக்கின்றது.

இதேபோல மலையக மக்கள் முன்னணியும் அரசுத் தரப்புக்கு மாறாக வேறுபட்டியலில் போட்டியிடவே தயாராகி வருவதாகக் கூறப்படுகின்றது.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது, நாடாளுமன்றில் அரசுத் தரப்பில் இணைந்து, அமைச்சர் பதவியையும் ஏற்றிருக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) அரசுப் பட்டியலுக்குப் புறம்பாக வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது என்பது தெரிந்ததே.

அதேபாணியில், இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி போன்றவை அரசுத் தரப்பில் அமைச்சர் பதவிகளை ஏற்று ஆளும் தரப்பில் இடம்பெற்றிருந்தாலும் மாகாண சபைத் தேர்தலில் அரசுக்கு எதிராகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளன என்று கூறப்படுகின்றது. (சி)

## களுதாவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றனர் என்று படையினர் தெரிவித்திருக்கின்றனர்.

இக்கிளைமோர்த் தாக்குதலில் விசேட அதிரடிப்படை சார்ஜன்ட் ஒருவரும் மற்றொரு கான்ஸ்டபிளும் உயிரிழந்திருந்தனர்.

எனினும், இச்சம்பவத்தில் இரண்டு பொதுமக்களே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் இதனால் களுதாவளைப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு பொதுமக்கள் சிலர் படையினரால் தாக்கப்பட்டு உடமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் மேலதிக செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களைப் படைத்தரப்பு அடியோடு மறுத்துள்ளது. (சி)

## மரண அறிவித்தல்
### திருமதி நாகேஸ்வரி வீரசிங்கம்



இலக்கம் 221/7, கனகசபை அவெனியூ, யாழ்ப்பாணம் முகவரியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டநாகேஸ்வரி வீரசிங்கம் நேற்று (22.06.2008) காலமானார்.

அன்னார் அமரர் வீரசிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர் சுந்தரம் மற்றும் இராசமணியின் அன்பு மகளும் அமரர்களான திரு திருமதி கதிர்காமரின் அன்பு மருமகளும் அமரர் சந்திரமோகன் மற்றும் றஞ்சிதவதனி, மதிவதனி, சந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் கனகலிங்கம், மற்றும் கமலநாதன் ஆகியோரின் சகோதரியும் ஜெயாநிதி, குலசேகரம், வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் பவளம், இராசமலர், புவனேஸ்வரி, அமரர் பாலசிங்கம் (லோகநாதன்) ஆகியோரின் மைத்துனியும் ஜெனித்தன், தர்மிதன், பவித்திரன், டக்சனன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2008) திங்கட்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*221/7, கனகசபை அவெனியூ,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

(75439)

தகவல்:
விரசிங்கம் சந்திரகுமார்
(மகன்)

மின்பாவனையாளர்களே!
உங்கள்மின்சார கட்டணத்தை
30% முதல் 60% வரை
குறைக்க வேண்டுமா?
விபரங்களிற்கு:-
Jaffnd Technical Institute,
No. 45, Clock Tower Roar,
Jaffna T.P. 2226434

விற்பனைக்கு
மிகவும் நல்ல நிலையில் உள்ள
SHARP-SF-1118
222, K.K.S Road (75633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.